விலை ரூபா: 8.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | மாசி 10 | செவ்வாய்க்கிழமை (22.02.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 65




இளவரசர் சாள்ஸின் இலங்கை விஜயம் குறித்து

## அரசு – பிரி. தூதரகம் இடையே முரண்பாடு

(கொழும்பு)

பிரித்தானிய இளவரசர் சாள்ஸின் இலங்கை விஜயம் தொடர்பான நிகழ்ச்சிநிரல் தயாரிப்பது குறித்து இலங்கை அரசாங்கத்திற்கும் கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத்திற்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காகப் பிரித்தானிய இளவரசர் சாள்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்ய உத்தேசித்துள்ளார்.

இந்த விஜயத்தின்போது கிழக்கு மாகாணத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

## எம்பிலிப்பிட்டிய நீதிமன்ற வளவில் கைக்குண்டு வீச்சு

### மூவர் பலி: 36பேர் காயம்: 33 கைதிகள் தப்பியோட்டம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள எம்பிலிப்பிட்டிய நீதிமன்ற வளாகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலினால் சிறைக்காவலர் உட்பட மூவர் ஸ்தலத்தில் பலியாகினர். 36 பேர் காயமடைந்த நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


இவர்களில் 19 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.


இந்தக் கைக்குண்டுத் தாக்குதலினால் நீதிமன்ற வளாகத்துள் நின்றுகொண்டிருந்த சிறைக்காவலர்கள், கைதிகள் மற்றும் பொது மக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் காயமடைந்தனர்.

குண்டுவெடிப்பு களேபரத்தை அடுத்து 33 கைதிகள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர். இவர்களில் (12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசும் புலிகளும் ஒன்றுபட்டால் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## ஜோர்ஜ் புஷ், பில் கிளிங்டன் நம்பிக்கை





இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் ஒன்றுபட்டுச் செயற்பட்டால் இனப் பிரச்சினையை விரைவாகத் தீர்க்கமுடியும்.

இவ்வாறு இலங்கைக்கு வருகைதந்த அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜோர்ஜ் புஷ், பில் கிளிங்டன் ஆகியோர் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் உறுதிபடத் தெரிவித்தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மன் அமைச்சர் இன்று யாழ். வருகிறார்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடவென ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் திருமதி றிச்சரற் சைல் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

இவருடன் 35 அதிகாரிகள் குழுவும் வருகைதரவுள்ளது. ஒருநாள் நல்லெண்ண விஜயமாக யாழ்ப்பாணம் வரும் ஜேர்மன் குழுவினர் வடபகுதியில் ஜேர்மன் உதவியுடன் மேற்கொள்ளப்படும் நிவாரண நடவடிக்கைகளையும் பார்வையிடவுள்ளனர். (ச-9)

## மாபெரும் பேரணி மார்ச் 2 இல்



மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் உட்பட்டோர் கொலைசெய்யப்பட்டமையைக் கண்டித்தும்; சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண நடவடிக்கைகளைத் துரிதமாக வழங்கக் கோரியும் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படவிருந்த பிரமாண்டமான பேரணியை எதிர்வரும் 2 ஆம் திகதி நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இதற்கான ஏற்பாட்டை யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொண்டுள்ளது. பல்லாயிரக்கணக்கான மக்களை ஒன்றுதிரட்டி தமிழ்மக்களின் நிலைப்பாட்டினை சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்துவதற்காக சகல பொது அமைப்புக்களும் ஒன்றிணைந்து இப்பேரணியை ஏற்பாடுசெய்துள்ளன.

இனப்படுகொலைகளை நிறுத்தல், நிவாரணப் பணிகளில் தமிழ்மக்கள் புறக்கணிக்கப்படுதல், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முறையாக அமுல்படுத்தல் போன்ற கோரிக்கைகளை சர்வதேச சமூகத்திற்கு தெளிவுபடுத்தி அவற்றினூடாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கவே இப்பேரணி மேற்கொள்ளப்படவுள்ளதாக பொது அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த மாபெரும் பேரணி நாளை மறுதினம் நடைபெறவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



சிறுவர்களுடன் அளவளாவும் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள்..

## பில்கிளின்டன் குழுவினர் மாலைதீவு பயணம்

(கொழும்பு)

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களைப் பார்வையிடவென இலங்கைக்கு வருகைதந்திருந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகளான பில் கிளின்டனும், ஜோர்ஜ் புஷ்ஷும் தமது விஜயத்தை நிறைவுசெய்த நிலையில் நேற்றுப் பிற்பகல் மாலைதீவு சென்றடைந்தனர்.

சுனாமி நிவாரண புனர்நிர்மாண நிதி திரட்டும் பணிகளின் பொருட்டு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள் நேற்று முன்தினம் மாலை இலங்கை வந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்தொழிலாளர் - இராணுவம் நேற்று சக்கோட்டையில் முறுகல்

(பருத்தித்துறை)

வடமராட்சி சக்கோட்டையில் நேற்று கடற்தொழிலாளர்களுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே வாக்குவாதம் முற்றி முறுகல்நிலைமை ஏற்பட்டது.

சக்கோட்டை கடற்தொழிலாளர்கள் கடலில் படகுகள் செல்லும் 'வான்' பாதையை துப்பரவுசெய்யும் பணியில் ஈடுபட்டனர்.

இதனைக் கடற்கரையில் முகாமிட்டிருக்கும் படையினர் வந்து தடுத்ததுடன், அனைவரையும் அவ்விடத்தை விட்டு செல்லுமாறு வற்புறுத்தினர்.

இதனாலேயே கடற்தொழிலாளர்களுக்கும், இராணுவத்தினருக்குமிடையே வாக்குவாதம் முற்றி பெரும் முறுகல் நிலைமை ஏற்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு இராணுவத்தினர் மேலதிக பொலிஸாரை வரவழைத்து 'வான்' துப்புரவில் ஈடுபட்டோரை கலைந்துசெல்லுமாறு உத்தரவிட்டனர். இச்சந்தர்ப்பத்தில் தொழிலாளர்கள் கலைந்துசெல்லாததால் சேவா லங்காப் பிரதிநிதிகள் இருவர் மற்றும் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர் ஆகியோரை பொலிஸார் கைதுசெய்தனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உறவுகளுக்கு உதவ இசை நிகழ்ச்சி மூலம் கனடாவில் நிதி சேகரிப்பு

மெல்லிசை ரசிகர்களின் கரம் பற்றி மெல்ல அழைத்து வந்து சாஸ்திரிய நதியில் நீராட்டும் இசையரங்கம் சுனாமியால் பாதிக்கப்பட்ட எமது உடன்பிறப் புக்களின் துயர்துடைக்க குறைந் தது 25 ஆயிரம் டொலர்களா வது நிதி திரட்டவேண்டும் என



ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சி கடந்த 5ஆம் திகதி கனடா ரொறன்ரோவிலுள்ள சீடாபரே கல்லூரி கலையரங்கில் நடை பெற்றது.

புகுந்த நாட்டில் எம்மவர் எதிர்கொள்ளும் பிரச்சினைக ளில் மட்டும் தம்மை ஈடுபடுத் துவதோடு நின்றுவிடாது தாய கத்தின் பிரச்சினைகள், தேவை கள், அறிவுப் பரிமாற்றம், விடு தலை என எல்லாப் பொறுப்புக் களும இளைஞர்களுக்குக் கைய ளிக்கப்பட வேண்டும் என்ற கோஷமும் நாங்கள் செய்யும் எந்த உதவியும் ஒரு பாதைக் கூடாக செலுத்தப்பட வேண்டும் என்ற கோஷமும் முன்வைக்கப் பட்டிருந்தது.

இந்த நிகழ்ச்சியின் மூலம் 29ஆயிரத்து 182 டொலர்கள் சுனாமி நிவாரண நிதிக்கு அன் பளிப்புச் செய்யப்பட்டது.

இசையரங்கம் எம்மவர்க ளின் தரமான கவிதைகளுக்கு இசைவடிவம் கொடுத்து மேடை யில் சுத்தமான ராக வரம்புக் குள் இசைக்கும் ஓர். அமைப்பு. ஆனால் இந்த மேடை சுனா மிககாக ஒழுங்கு செய்யப்பட் படியால் சுனாமிக்காக இசை யமைக்கப்பட்ட பாடல்களும் மேடையில் பாடப்பட்டது. கனடா வின் பல பாகங்களிலிருந்தும் பாடகர்கள் வந்து பாடியமை சிறப்பம்சமாக இருந்தது மட்டு மல்லாமல் பல இசையமைப் பாளர்களின் பாடல்களைப் பாடி யது இசையரங்கத்தின் பெருந் தன்மையாகவும் காணப்பட்டது. மேடை நிகழ்ச்சிகளை கலைஞர் மனோரஞ்சிதம் செல்வகுமார் நெறிப்படுத்தினார்.

மேடையில் இசை வழங்கிய கலைஞர்களை இசையமைப் பாளர் பயாஸ் சவாகீர் வழி நடத்தினார். பிரபல பாடகர் வர்ண ராமேஸ்வரனோடு கேரளக் குயில சிந்துமோகன் இசைக்கு ஏது எல்லையின் வடிவங்களை பாடி னர். சுகலியா, நிருபன், தர்ஷினி கோபி, நிமால் என்பவர்கள் ராகங்களில் அமைந்த மெல்லிசை வடிவங்களைப் பாடினார்கள்.

ரிபாஸ்கர், நடா ஜெயதேவன், எலிசபெத் மாலினி, ஜூட்சன்



சூசைதாசன், செந்தூரன், ஈஸ்வரன் எனபவர்கள் சுனாமிக்காக இசை யமைக்கப்பட்ட பாடலைப் பாடி னார்கள்.

இறுதியில் நல்லதோர் வாத் திய விருந்துடன் நிகழ்ச்சி முடி வுற்றது. இதனை தனது சொந் தச் செலவில் ஒழுங்கு செய்த தமிழ் சமூகப் பற்றாளர் இசை யரங்க இயக்குநர் வைரமுத்து சொர்ணலிங்கம் பாராட்டுக்குரியவர்.

இசையரங்கத்தின் அடுத்த நிகழ்ச்சி மே மாதம் 22 ஆம் திகது நடைபெற இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (க)

# உண்ணாப்புலவில் 100 தற்காலிக வீடுகள் கொண்ட குடியிருப்பு திறப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் விளைவாக தங்களது வாழ்வாதாரங்களை இழந்து நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டு தமிழர் குடும்பங்களுக்கான தற்காலிக வீடுகளைக் கொண்ட குடியிருப்புக்களை தமிழர் புனர் வாழ்வுக்கழகம் அமைத்து குடியிருத்தி வருகின்றது.

இதன் தொடர் நடவடிக்கையாக முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி நலன்புரி நிலையத்தில் பராமரிக்கப்பட்டு வந்த 360 குடும்பங்களில் 100 குடும் பங்களுக்கான தற்காலிக வீடுகளைக்கொண்ட குடி யிருப்பு ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் முல்லைத்தீவில் உள்ள உண்னாப் புலவு என்னும் இடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக ஒருங்கிணைப்பில் நிறுவப்பட்டு திறந்து வைக்கப் பட்டுள்ள இக்குடியிருப்பு நிகழ்வில் மாவட்டப் பணிப் பாளர் மு.ராமமூர்த்தி, முல்லைத்தீவு மாவட்ட கடற் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர ரங்கன், நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், லண் டன் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் செல் வரட்ணம், முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன், கடற்புலிகளின் நகரப் புறத தளபதி தினேஸ், கள்ளப்பாட்டுப் பகுதி கிராம சேவகர் சேந்தன் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட ஆழிப்பேரலை அனர்த்த விசேட பணிப்பாளர் றெஜி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்குடியிருப்பு திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து குடியிருத்தப்பட்ட குடும்பங்களுக்கான அடிப்படைத் தேவைகளையும் தமிழர் புனர்வாழ் வுக் கழகம் வழங்கியுள்ளது.

குறிப்பாக சமயல் உபகரணங்கள், உலர்உணவுப் பொருட்கள், நுளம்பு வலைகள், டோர்ச்லைட், மண் ணெண்ணை அடுப்பு போன்றவை வழங்கப்பட்டன. இப்பொருட்களுடன் ஒவ்வொரு குடுமபத்தினருக்கும் தலா ஆயிரம் ரூபா பணமும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிப் பிடத்தக்கது. (க)

# இராசி பலன்

**22.02.2005**
**மாசி 10, செவ்வாய்க்கிழமை**
**திரயோதசி முற்பகல் 7.57 மணிவரை**
**பூசம் முற்பகல் 9.58 மணிவரை**
**இராகுகாலம் 3.30 - 5.00 மணிவரை**
**சுபநேரம் 11.00- 12.30**

**மேடம்** கல்வியில் ஆர்வம், அற்பர் நேசம், ஆரோக்கியக்குறைவு, முயற்சி தாமதம்.

**இடபம்** இனிய அனுபவம், வாக்குமேன்மை, தடைப்பட்டகாரியம்கைகூடும், பணவசதி.

**மிதுனம்** கௌரவக்குறைவு, பித்தரோகம், வேலைச்சுமை, முயற்சி தாமதம்.

**கடகம்** நல்லமுயற்சி, சயனசுகம், புதிய பொருள் சேர்க்கை, அதிகாரிகள் சந்திப்பு.

**சிங்கம்** உணர்ச்சிவசப்படுதல், புத்திசாதுரியம், சயனசுகக் குறைவு, ரோகநிலை.

**கன்னி** குதூகலமான சம்பவம், பொருள் சேர்க்கை, முயற்சி கைகூடும், தேகநலன்.

**துலாம்** சுபநிகழ்ச்சி, புதிய தகவல், செய் தொழில்விருத்தி, சகோதரர் உதவி.

**விருச்சிகம்** வயிற்றுக்கோளாறு, அச்சமான நிலை, திடீர் நன்மை, தொழில்சிந்தை.

**தனுசு** வீண்தொல்லை, உடல்நலக்குறைவு, காரியதாமதம், அபகீர்த்தி.

**மகரம்** கலந்துரையாடல், பிரயாணநன்மை, விருந்துபசாரம், பொருள்சேர்க்கை.

**கும்பம்** தடைப்பட்ட காரியம் கைகூடும், பெரி யோர் சந்திப்பு, சத்துருஜெயம், பிரயாணம்.

**மீனம்** தாழ்ந்த சுபாவம், ஆரோக்கியக் குறைவு, பணவிரயம், எதிர்பாராத நன்மை

பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது
- வளவன்

## வெலிகந்தவில்
# சுட்டுக்கொல்லப்பட்டவர் ஆயுதக்குழு உறுப்பினர்


பொலன்னறுவை மாவட்டம் வெலிக்கந்த பிர தேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக் குதல் சம்பவத்தில் கொல் லப்பட்டவர் ஆயுதக்குழு உறுப் பினர் வில்லியசிங்கம் மனோகரன் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் சுதாகரன் எனபபடும் விநாய கமூர்த்தி ஜெகநாதன் என வெலிக்கந்தைப் பொலி ஸார் தெரிவித்தனர்.


இந்த சம்பவத்தின்போது இவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபர் மீது மனோகரன் என்பவர் கைக் குண்டுவீசி தாக்குதலை மேற் கொண்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.


கொல்லப்பட்டவரின் கையில் கைக்குண்டின் கிளிப் காணப்பட்டதையடுத்தே இந்தத் தகவல வெளிவந்துள்ளது.

இந்த துப்பாக்கிப் பிரயோகத் திற்கு ரி-56 ரக துப்பாக்கி பயன் படுத்தபபட்டுள்ளது. 12 வெற்றுத் தோட்டா ரவைகள் அந்த இடத்திலிருந்து கண்டெ டுக்கப்பட் டுள்ளன என்று பொலிஸ் தரப்புத் தக வல்கள் தெரிவிக்கின்றன. (க)









சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் நிதியுதவியுடன் யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் அமைக்கப்பட்ட கட்டடத் திறப்புவிழாவில் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப் பாளர் கலைவிழி தேசியக்கொடி ஏற்றுவதையும் யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் புதிய கட்டடத்தைத் திறநதுவைப்பதையும், மேடையில் அமர்ந்திருப்பவர்களையும், மாணவர்களைளயும் படங்களில் காணலாம்.

(படங்கள் :- ஞா.ஐங்கரன்)

## இன்று ஒரு தகவல்

## சித்தர்கள் சிந்தனை

“சார்! அங்கே என்ன ஒரே கூட்டம்?” என்றார் ஒருவர். “அதுவா அந்த வீட்டில் ஒரு வயதானவர் இருந்தாரல்லவா? அவர் மூச்சுவிட மறந்து விட்டாராம்” இது ஒருவருடைய வேடிக்கையான பதில். இவரும் ஒரு நாள் அப்படி மறந்துவிடப் போகிறவர்தான். இருந்தாலும் இப்போது அதை நினைத்து அதற்காகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்க இவர் தயாரில்லை.

மூச்சு என்றால் என்ன அது ஒரு சாதாரண விஷயமா? அது போய் விட்டால் இனி அவருக்கு வேலை இல்லை என்று தானே அர்த்தம். மனித உடலில் மூச்சு எப்படி இயங்குகிறது. உள்ளே போய்வரும் காற்று இந்த உடலை எப்படி நடமாட்டத்தில் வைத்திருக்கிறது இது ஒரு தனி ஆராய்ச்சி.

ஒரு கட்டத்தில் உயிர் உடலை விட்டுப் பிரிந்துவிடுகிறது. அப்படி என்றால் உயிரையும் உடலையும் அதுவரை ஏதோ ஒன்று இணைத்து வைத்திருக்கிறது. அது என்னவாக இருக்கும் அது ஒரு ரகசியமான உறக்கம். இது சம்பந்தமான ஆராய்ச்சியில் நிபுணர்கள் யார் தெரியுமா? சித்தர்கள்.

உடலிற்குள் இருக்கும் ரகசியங்களை அவர்களை விடப் பெரிதாக வேறு யாரும் சொல்லிவிடவில்லை. மனித உடலுக்குள் 72,000 நாடி நரம்புகள் இருப்பதாக சித்தர்கள் கூறுகின்றனர். இதில் முக்கியமானது 24. அதுசரி! இந்த இருபத்திநான்கில் அப்படி என்ன விசேஷம்? இந்த இருபத்திநான்கு நாடி நரம்புகளும் மற்ற நரம்புகள் மாதிரி இல்லாமல் எப்போதும் உறக்கத்திலேயே இருக்குமாம்.

இருபத்திநான்கு நாடி நரம்புகளில் 10 நாடிகள் மேல் நோக்கியும் 10 நாடிகள் கீழ் நோக்கியும் இருக்கும். மிகுதி நான்கும் பக்கத்திற்கு இரண்டு மீற்றராக பிரிந்துபோய் பாம்பு மாதிரி சுற்றிவளைத்துக் கொண்டு கிடக்கும். இவற்றில் தான் உயிரின் ஜீவ ஆற்றல் அறிதுயில் செய்கிறதாம்.

இந்த இருபத்திநான்கு நாடிகளிலும் 10 மிக முக்கியம். அந்த பத்தில மூன்று மிக முக்கியம். இந்த மூன்றிலும் தான் அந்த ரகசியமான உறக்கம் பொதிந்து கிடக்கிறதாம். இந்த மூன்றும் நமது உயிரை உடலோடு இணைத்துக் கொண்டு இயங்குகிறதாம். இந்த நாடிகளின் மூன்று வாயுக்களுக்கும் மூன்று பெயர் உண்டு. இடகலை, பிங்கலை, சுழுமுனை. சந்திரன்,சூரியன்,அக்கினி என்றும் சொல்வதுண்டு. இடதுராசியில் இழையும் மூச்சு இடகலை. வலது நாசியில் இயங்கும் மூச்சு பிங்கலை. சுழுமுனை என்பது இரண்டு நாடியிலும் வந்து போய் இயங்கும் சுவாசம்.

இந்த மூன்று மூச்சுக்களின் இயக்கத்தைப் பற்றி நமது சித்தர்கள கூறியிருக்கும் ரகசியத்தையெல்லாம் வெளிநாட்டுக்காரர்கள் ஆராய்ச்சி செய்கின்றனர். சில காலத்துக்கு முன்பு லெனின் கிராட் பல்கலைக் கழகத்திலிருந்து டாக்டர் மெஸ்ஸிங் என்ற ஒருவர் இந்தியாவுக்கு வந்தாராம். அவர் ஒரு விஞ்ஞானப் பேராசிரியர். இமயமலைச் சாரலில் வந்து கொஞ்சக் காலம் தங்கினாராம். அங்குள்ள சில யோகிகளிடம் பழகி **Self induced Cataleplic State** என்ற மூச்சு வித்தை பற்றி தெரிந்து சென்றாராம்.

அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? “இந்தியாவில் இருக்கும் சித்தர்கள் பல வாரங்கள் மூச்சுவிடாமல் மரக்கட்டை போல் உயிர் இருந்தும் இல்லாதது மாதிரி ஒரு யோக சமாதி நிலையில் இருக்கின்றனர். என்னால் இப்போது மூன்றுநாள் வரை அப்படி இருக்க முடிகிறது. அதற்கு மேலும் அதுபோல் இருப்பதற்கு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன்” என்று சொன்னாராம்.

இந்த மூன்று மூச்சுக்களைப் பற்றி சித்தர்களின் நூலில் இன்னும் சில ரகசியம் உண்டாம். வளர்பிறையில் முதல் மூன்று நாட்கள் அதாவது அமாவாசை கழித்து மறுநாளிலிருந்து மூன்றுநாள் காலையில் எந்த நாசி எப்படி இயங்கும் என்ற கணக்கைச் சொல்கிறார்களாம். நான்காம் நாளிலிருந்து ஆறாம்நாள் முடிய இதுமாறும். அதன பின் ஏழாம் நாளில் இருந்து முதல் மூன்றுநாள் மாதிரி மீண்டும் இயங்கும். இப்படியே மூன்று நாட்களுக்கு இடகலை, பிங்கலையும் மாறி மாறி ஒரு சட்டதிட்டத்தின்படி வேலை செய்யும். இப்படி இருந்தால் அந்த உடல் ஆரோக்கியமாக இருக்கிறது என்று அர்த்தம். இந்த இரணடைத தவிர சுழுமுனை என்ற மூன்றாவது மூச்சு எப்படி இயங்குகின்றது என்பதற்கும் ஒரு வாய்ப்பாடு இருக்கிறது.

அதெல்லாம் இருக்கட்டும் காலையில் எழுந்ததும் மூச்சு எந்த நாசியில் எப்படி இழைகிறது என்பதை வைத்துச் சில விஷயங்களைப் புரிந்து கொள்ளமுடியுமாம். இப்போது உதாரணத்துக்கு ஒரு இரவு முழுவதும் ஒரு நாசியில் மூச்சு ஓடிக் கொண்டிருந்தால் அந்த உடம்புக்கு மூன்று வருடத்திற்கு மேல் உயிராற்றல் இல்லை என்று முடிவு செய்து கொள்ளலாமாம். இரவு முழுவதும் இடகலையும் பகல் முழுவதும் பிங்கலையும் மாறாமல் நடந்து கொண்டிருந்தால் அந்த மனிதன் ஆறுமாதத்தில் மரணத்தை நெருங்குகிறான் என்று அர்த்தம் .

இரண்டு கண்களையும் அழுத்தினால் கண்ணீர் வர வேண்டுமாம். வராவிட்டால் அந்த உடம்புக்கு 10 நாளில் முடிவு வந்துவிடுமாம். ஆகாயத்தில் உள்ள நட்சத்திரம் பார்வைக்குத் தெரியாவிட்டால் ஐந்து நாளில் மரணம். மூக்கு நுனி தெரியாவிட்டால் மூன்று நாளில் மரணம் இப்படியெல்லாம் சொல்கிறதாம் சித்தர் இலக்கியம். இது போல் ஏதாவது அறிகுறி தெரிந்தால் உடனே சித்தர்கள் மூச்சு இயக்கத்தை சரி செய்து கொள்வார்களாம்.

நாம இவற்றை முடிந்தளவு புரிந்துகொண்டால் நீண்டநாள் ஆரோக்கியமாகவும், நலமாகவும் இருக்கமுடியும். இந்தத் தகவலைக் கேட்டுவிட்டு உடனே உங்கள் மூச்சு எப்படி ஓடிக்கொண்டிருக்கிறது என்று பார்த்துவிட்டு தவறாகப் புரிந்துகொண்டு பயந்துவிடாதீர்கள்.

ஒருத்தர் அப்படித்தான் ஓடிவந்தார். “சார் எனக்கு மூச்சு வித்தியாசமாக ஓடிக்கொண்டிருக்கிறது பயமாக இருக்கிறது சார்” என்றார். “எப்படி...இடைகலையா பிங்கலையா சுழுமுனையா?” என்று கேட்டேன். “இது மூன்று இல்லை. அது நான்காவது விதமாக இருக்கிறது வாய் வழியாக மூச்சு ஓடிக்கொண்டிருக்கிறது” என்றார்.

கொஞ்சம் கவனித்துப் பார்த்த பின் தான் விபரம் புரிந்தது. அவருக்குக் கடுமையான ஜலதோஷம் அதுதான் மூக்கு அடைபட்டுப போய் வாயின் வழியாக சுவாசித்துக் கொண்டிருக்கிறார்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளின் இலங்கை விஜயம் மர்மமானது

## என்கிறார் அமைச்சர் சுனில் கந்தனத்தி

(கொழும்பு)

நோர்வே நாட்டு சமாதானப் பிரதிநிதிகள் இலங்கைக்கு மேறகொண்டு வரும் சுற்றுப் பயணம் தொடர்பாக பாராளுமன்றத்தில் சில கேள்விகள் எழுப்பபபடும் என சிறிய நடுத்தர கைத்தொழில் கிராமிய பிரதி அமைச்சர் சுனில் கந்தனத்தி தெரிவிக்கின்றார்.

கொழும்பில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் இலங்கைக்கு எத்தனை தடவை வந்துள்ளார்? என நான் பாராளுமன்றத்தில் கேட்கவுள்ளேன்.

ஏனெனில் அவ்வளவு அதிக தடவைகள் இலங்கை வந்துள்ளார்.

ஒவ்வொரு நாளும் ஒரே செய்தி தான் வருகின்றது. அதாவது எரிகசொல்ஹெய்ம் இலங்கைக்கு வந்தார் ஜனாதிபதியை சந்தித்தார், பிரதமரை சந்தித்தார், எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்தார், தமிழ்ச்செல்வனை சந்தித்தார்.

இதனைத் தான் தினமும் சொல்கின்றார்கள். வருகிறார், போகிறார் அந்தளவுக்கு அவர்களுக்கு என்ன அரசியல் தேவை உள்ளது.

சமாதான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வருகிறார் என அரச தரப்பினரும் விடுதலைப் புலிகள் தரப்பினரும் செய்தி வெளியிடுகின்றனர்.

ஆனால் சமாதான நடவடிக்கைகள் மென்மேலும் சோர்ந்து போய்விட்டதே தவிர வேறு ஒன்றும நடக்கவில்லை.

எந்த நாட்டில் தான் பிரச்சினை இல்லை எவருக்கு தான் பிரச்சினை இல்லை.

ஆனால் எமது நாட்டில் உள்ள பிரச்சினையை மட்டும் ஏன இந்த நோர்வே அரசு பூதாகரமாக்கிறது.

ஏதோ சுற்றுலாப் பயணம் செய்கின்றவர்கள் போல இந்த நோர்வேப் பிரதிநிதிகள் இலங்கை வந்து போகின்றார்கள்.

சமாதானம் என்ற போர்வையில் இவர்கள் ஏன் இலங்கை வருகிறார்கள்?

இதனால் தான் நாம் பாராளுமன்றம் கூடும்போது இவர்களது இலங்கை விஜயத்திற்கான காரணத்தை அறியவுள்ளோம் என்றார். (க-8)

# ரயில்வே ஊழியர்கள் வேலைப் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

பத்து ரயில்வே தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் நேற்று முன்தினம் நள்ளிரவிற்குப் பின்னா எந்தவொரு ரயிலும் வெளிப் பிரதேசங்களில் இருந்து கொழும்புக் கோட்டைக்கு வருகை தரவில்லை எனவும், கொழும்புக் கோட்டையில் இருந்து ரயில்கள் வெளி மாவட்டங்களுக்கு செல்லவில்லை எனவும் ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக பயணிகள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கொழும்புக் கோட்டைக்கும் மாத்தறைக்கும் இடையி லான கரையோர ரயில் சேவையை நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்ததால் நேற்று அதிகாலை பெரும் தொகையான பயணிகள் மாத்தறை ரயில் நிலையத்தில் காத்திருந்ததாகத் தெரி விக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை 4 மணிக்கு மாத்தறையில் இருந்து கொழும்புக் கோட்டையை நோக்கிச் செல்லவுள்ள ரயில் சேவை ரத்துச் செய்யப்பட்டதாக ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2005ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத திட்டத்தில் முன்வைக்கப்பட்ட யோசனையின் பிரகாரம் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வை தங்களுக்கு வழங்கவேண்டும் என வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ரயில்வே தொழிற்சங்க பிரதிநிதிகள் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக அண்மையில் அதிகாரிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் பலன் அழிக்காதது காரணமாகவே இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு தீரமானிக்கப்பட்டதாக ரயில்சேவை தொழிற சங்கங்களின் ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது. (க-9)

## பாடசாலை திறப்பு விழாவிற்கு படையினரும் பொலிஸாரும் குவிப்பு

(மன்னார்)

மன்னார் மத்திய மகாவித்தியாலய உயர்மாடிக் கட்டடத் திறப்பு விழாவிற்கு கவச வாகனம் சகிதம் பெருமளவிலான படையினரும், பொலிஸாரும் குவிக்கப் பட்டதால் மக்கள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டது.

நிகழ்வில் ஈபிடிபி உறுப்பினர் கலந்துகொண்டமையாலேயே இந்நிலை ஏற்பட்டது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்,மாணவிகள, பெற்றோர் ஆகியோர் கடுமையாக உடற்சோதனை செய்யப்பட்ட பின்பே உட் செல்லுவதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

இதனால் மாணவர்கள், பெற்றோர்கள் பதற்றம் அடைந்திருப்பதுடன்,பெரும் விசனம் அடைந்து சிலர் வீட்டுக்குச் சென்றனர்.

மேலும் அங்கு படம் எடுக்கச் சென்ற செய்தியாளர்கள் தடுக்கப்பட்டதுடன் அவர்களுடன் படையினர் வாக்கு வாதத்திலும் ஈடுபட்டனர்.

இந்நிகழ்வில் வலயக்கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்விப் பணிப்பாளர், திட்டப் பணிப்பாளர், நானாட்டான் பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்ட போதிலும் மாணவர், பெற்றோர் மீதான உடற்சோதனைக்கு எது வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை .

மேலும் இந்நிகழ்விற்கு தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழ்க கூட்டமைப்பினர் அழைக்கப்பட்டிருந்த போதும் எவரும் கலந்துகொள்ளவில்லை.

இப்பாடசாலை நிகழ்விற்கு இவ்வாறான வேண்டப்படாத செயற்பாடுகளை மேற்கொண்டமைக்காகவும், மாணவர்கள் உடற்சோதனைக்கு உட்பட்டமைக்காகவும் மன்னார் வெகுஜன அமைபுக்களின் ஒன்றியும் தொழிற்சங்க இணையம், மக்கள அமைப்புகள், தமிழர் மாணவர் ஒன்றியம் என்பன கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. (க-8)

## இறைச்சிக் கடைக்கு சீல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைப் பொதுச் சந்தையில் உள்ள இறைச்சிக் கடையொன்றில் பசுமாட்டிறைச்சி விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டதையடுத்து இறைச்சி விற்பனையாளர்களுக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் இறைச்சி பறி முதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டது.

சுகாதாரப் பரிசோதகர்களது பரிசோதனையின் பின்னரே மாடுகளை இறைச்சிக்காக வெட்டப்படுவதே வழமை. ஆனால் பரிசோதகர்கள் வரமுன்னரே கொல் களத்தில் வெட்டப்பட்டதால் சந்தேகம் கொண்டு சுகாதாரப் பரிசோதகர்கள் விசாரணை மேற்கொண்டதில் பசுமாடு கொல்லப்பட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து கடை உடனடியாக சீல் வைத்து மூடப்பட்டது. அத்துடன் கடையை மறுஅறிவித்தல் வரை திறக்க தடை விதிக்கப்பட்டது. (ப-29)

## கரையோர பிரதேசங்களை அரசாங்கம் சுவீகரிக்காது

### பிரதி அமைச்சர் மஹிந்த சமரவீர

(கொழும்பு)

கடற்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ்ந்த கரையோரப் பிரதேசங்கள் எதையும் அரசாங்கம் சுவீகரிக்க மாட்டாதென்று நகர அபிவிருத்திப் பிரதியமைச்சர் மஹிந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்றுக் காணித் துண்டுகளையும் புதிய வீடுகளையும் அரசாங்கம் வழங்கவுள்ளது.

100 மீற்றர் எல்லைக்குட்பட்ட காணிகளை பயிர்ச செய்கைகளுக்கும் மீன்பிடி வள்ளங்களை நிறுத்தி வைப்பதற்கான தரிப்பிடங்களை அமைப்பதற்கும் உபயோகிக்க முடியும்.

கரையோரத்தில் வீடுகளைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கியதால் கடற்பேரலை அனர்த்தத்தால் ஏற்பட்ட உயிர்ச சேதமும் சொத்து இழப்புகளும் மிகவும் அதிகமாகக் காணப்பட்டது.

1981 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கரையோரப பாதுகாப்புச் சட்டத்தை மக்கள் அனுசரித்து நடக்கவில்லை எனக் குறிப்பிட்ட அமைச்சர் 300 மீற்றர் எல்லைக்குள் கட்டடங்களைக் கட்டுவதனால கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்படுவது கட்டாயமானதாகும் என்றார்.

ஆயினும் கடந்த 24 வருடங்களாக இந்த வழிமுறைகள் எதுவும் கடைப்பிடிக்கப்படவில்லை.


அதேசமயம் கடந்த 50 வருடகாலமாக கரையோர முகாமைத்துவ நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். இதற்கிடையில் உலகில் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் பூமி அதிர்ச்சிகள் ஏற்படலாமென்ற அச்சம் நிலவுவதால் இதுதொடர்பான முன்னெச்சரிக்கை வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமென பேராதனைப் பல்கலைக் கழகத்தின் புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளா கபில தகநாயக்க தெரிவித்துள்ளார்.

புவியியறதுறைப் பேராசிரியர் சி.பி. திஸநாயக்கா கடல் பேரலை அனர்த்தம் ஏற்படக்கூடிய பிரதேசங்களை இனங்காண்பதற்கான திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்தினார். (க-7)

## மருத்துவ விளக்கம்

# பொல்லாப்பிணி அகற்றும் நாட்டு மூலிகைகள்

ஆயுர்வேதம் இயற்கையோடும் இறைவனோடும் ஒன்றிய வேதம். இறைவழிபாட்டில் உருவ வழிபாடு அநேகமான மதங்களில் உள்ளது. உருவவழிபாட்டில் அர்ச்சனை, உள்ளததால் நினைந்து மெய்சிலிர்த்து உள்ளம் உருகி வாய்மொழிகளால் இறைவனின் திருநாமங்களை ஓதி, தெய்வத்தன்மை பொருந்திய துளிர், பூ, இலை போன்றவைகளை மூலாதாரமாகக கொண்டு இறைவனை வணங்குகின்றோம்.




**"சலம்பு,வொடு தூபமறநதறியேன்**
**தமிழோடிசை பாடல் மறந்தறியேன்**
**அலந்தீங்கினுமுன்னை மறந்தறியேன்**
**உன்நாமம் என்நாவில் மறந்தறியேன"**

இப் பாடல் ஊடாக இறைவனுக்கு நீர், பூ, தூபம், நாமம் பிரியமானவை என்பது தெளிவாகின்றது. எனவே நாமும் நாளாநத நடைமுறையில் இவற்றைக் கையாள வேண்டும் என்பதையே பெரியோர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். இறைவனுக்கு பூ, இலை, பழம் படைத்து வழிபடுவதன் முக்கியத்துவம் உணர்ந்தறியக்கூடியது.

முழுமுதற் கடவுளாகிய விநாயகருக்கு பிரியமான மூலிகைப் பொருளான அறுகம்புல் அர்ச்சனைக்கு மூலாதாரமானது. அன்னை பராசக்திக்கு அர்ச்சனைக்கு கந்தது. வேம்பு, பிறவிப்பிணி தீர்க்கும். சிவபெருமானுக்கு உகந்த கூவிலம் (வில்வம்) என்னும் மூலிகை. இவை நம் நாட்டில் இலகுவில கிடைக்கும் சக்திவாய்ந்த மூலிகைகளாகும். இவற்றைவிட விஷ்ணுவிற்கு பரியமானது துளசி.துளசிதான என்னும் நாமம் விஷணுவிற்குண்டு. ஆஞ்சநேயருககுப் பிரியமானது வெற்றிலை. காத்தற் கடவுளான வைரவருக்குப் பிரியமானது உழுந்து. சனீஸ்வரனுக்குப் பிரியமானது எள். இதனால் இயற்கை வைத்தியம் என்று கூறப்படும் மூலிகை வைத்தியம் நம் மக்களுக்குத் எளிதாகவும், இலகுவாகவும் கிடைக்கக்கூடியன என்பது புலனாகின்றது: இவற்றின் பாவனையை நன்கு அறிந்து பாவிப்பதால் நோயின்றி ஆரோக்கியமாக வ்ாழலாம்.

நம் நாட்டு மூலிகை வகைகளில் எளிதில் கிடைக்கக் கூடிய சக்திவாய்ந்த கூவின (வில்வம்) த்தின் குண இயல்பு பற்றி ஆராய்வோம்.

வில்வத்தில் மஹாவில்வம் என்பது சிவனுக்குப் பிரியமானதும மகத்துவம் வாய்ந்ததுமாகும்.

"கூவிலம் இதழ்தும்பை கொண்டர்ச்சனை செய்தோர்க்கு
தேவ்நாட்டாள வைக்கும் திருக்கைவேல் செங்குந்தம் துணை"

செங்குந்தம் என்றால் முருகன். எனவே வில்வம் முருகனுக்கும் பிரியமானது எனப் புலப்படுகின்றது.

முருகன் சாதி சமயங்களுக்கெல்லாம் அப்பால் கடந்து நின்று தன்னை நினைப்பவர்க்கு அருள் புரிபவன். பவரோக வைத்தியநாதன் அதேபோல கூவிலம என்ற வில்வம் தன்னை ஆதரிப்பவர்களின் வினை தீர்க்கும்; பாவம் போக்கும்; தூயவனாக்கும் சக்தியுடையது.

தொழுவதால், பார்ப்பதால், நினைபபதால் ரோகங்கள் சுகம் பெறும.(உ+ம்) வேப்பிலையை உடலில் தடவுவதால் விஷ்க்குற்றங்கள், தோஷங்கள் நிவர்த்தியாகின்றது. வேப்பமரத்தின் கீழ் இருப்பதால், மரத்தைப் பார்ப்பதால் தேகத்துக்குக் குளிர்ச்சியும், உடலுககு நல்லகாற்றும் கிடைக்கின்றது. கடற்கரையில உலாவுவதாலும், கடலைப் பார்ப்பதாலும் மனம் அமைதிபெற்று மூளை குளிர்ச்சி பெறுகின்றது.

வன்னி,பாதிரி,வில்வம்,மா, மந்தாரை என்ற பஞ்சதருக்கள் தேவலோக விருட்சங்கள். மானசீக தீட்சைக்கு வன்னி மரமும் (நினைக்க நற்பலன் கொடுக்கும் சக்திவாய்ந்தது) நயன தீட்சைக்கு பாதிரி (பார்க்க நற்பலன் கொடுக்கும்) சக்திவாய்ந்தது. ஸ்பரிச தீட்சைக்கு வில்வ மரம் (கைகளால் தொட்வும் உபயோகிக்கவும் நற்பலன் கொடுக்கும) சக்திவாய்ந்தது. எனவேதான் நம் முன்னோர்கள் இவற்றை தல விருட்சங்களாக்கி திருப்பாதிரிப் புலியோர், காணஸ்தின், திருநல்லாறு என்ற புண்ணிய தலங்களை. உள்ளடக்கியுள்ளனர் போலும். "கூவிலம் இல்லாத சிவாலயம் இல்லை"

தெய்வீகத்தன்மை உடைய கூவனம் மருத்துவ குணமுடையதென்பதில் சந்தேகம் இல்லை. உடற்பிணியையும் பிறவிப் பிணியையும் தீர்க்கக்கூடியது.

"த்ரிதுறைஞ்ச திரிதுறை காரம்
த்ரிநேத்ராஞ்ச திரியாயுதம்
தரிஜன்ம பாப சம்ஹாரம்
ஏன பில்பம் சிவார்ப்பணம்"

முக்குண தோஷங்களையும் சம்காரணம் செய்யும் குணம் வில்வ பத்திரத்திற்குண்டு. உடல் வனப்பையும் பலத்தையும் தரும். வியர்வையை வெளியேற்றும். சூட்டைக்கொடுத்து சூட்டைத் தணிககும் குணமுடையது. வெண்குஷ்டத்தைக் குறைக்கும். பெரும்பாடு ரோகத்திற்குப் பயன்கொடுக்கும் சக்திவாயந்த மூலிகை.

முற்றின வில்வம் காய்களில பற்பொடி தயாரித்து பல்துலக்கினால் பல் வியாதிகள் அகலும். வில்வம் பழம் மலபந்தத்தை அகற்றும். அத்துடன் வயிற்றோட்டமுள்ளவர்களுக்கு மலத்தைக் கட்டும் குணமும் வில்வம் பழத்திற்குண்டு. வில்வ வேரைப் பக்குவப்படுத்தி உண்பதால் தேகம் தேஜஸ் பெறும். முகம் அழகு தரும்.

வில்வாதி லேஹியம் நிகரற்ற மருந்தாகும். வில்வ மரத்தில் மஹாவில்பத்திரம் நோய்க்கும் அர்ச்சனைக்கும் சிறப்பு வாய்ந்ததாகும்.

வில்ப பத்திரத்தை நீரில் ஊறவைதது்ப் பருகினால் வேத்திரரோகங்கள், பித்த ரோகங்கள் தணியும். செம்புப் பாத்திரத்தில் ஊறவைக்கும் வில்வ தீர்த்தம் வெகுவீர்யசக்தி வாய்ந்ததாகும்.

### வேம்பு

வேப்பிலையை வேகவைத்து அந்நீரை சிறிது சிறிது அருந்துவதால் உடலில் உள்ள நோய்க்கிருமிகள் அழிவதுடன் கிருமிகள் உற்பத்தியாகாமலும் த்டுககும. அனறாட உடல் உறுபபுத் தேய்மானங்களை புதுப்பிக்கும். வாத வீக்கம், சொறி, கரப்பன் இவற்றைப் போக்கும் விசசுரம், காமாளைகளுக்கு வேப்பம் பட்டைக் கஷாம் உகந்த மருந்தாகும். வேப்பம் பட்டைப புகையை விஷக்கிருமிகள் அணுகாது சுகந்த வாசனையைக் கொடுக்கும். வேப்பம் வித்தில் செய்யபபடும் எண்ணை சிறந்த வாத நிவாரணியாகப பயன்படும். வேபபமரக் காற்று இரத்த சுத்தியைக் கொடுத்து சுவாச ரோகங்களையும் அகற்றும். கண்கள் குளிர்ச்சி பெறும். தலைவலி, நேத்திர ரோகங்கள் குணமாகும்.

### அறுகம்புல்

விநாயகருக்குரிய மூலிகை இதனை அவித்துப் பருகினால் உடலில் உள்ள விசம் மருந்தின் வேர்க்காடு தணியும. உடல் குளிர்ச்சி பெறும். உடல் வலிவடையும். "அகாதது அறுகம்புல்லால் ஆகும்".

### தும்பை

விலா முறிவுகளுக்குப் பயன்படும் மூலிகை. வயிற்றுக் கோளாறால் ஏற்படட சுரத்திற்கு தும்பை, வேப்பிலை, கண்டங்கத்தரி, இலை பாகம், பண்ணி உண்பதினால் சுரம் தணிந்து உடல் தேறும்.

### தூதுவளை

வேப்பிலை ஆடாதோடை இலை, அத்தியிலை தூதுவளை இலை சமபாகம் எடுத்து அவித்து உண்பதினால் நிபி எனப்படும் கசம், காசம், மூச்சுவாங்கல், சளிச்சுரம், முட்டு நீங்கும். கபஹாரகாரி.

### ஆடாதோடை

தூதுவளை போல கபம் அதிகரித்த நிலையில் ஆடாதோடையைப் பயன்படுத்தினால் கபம் தீரும். SUNUP BASAKA என்னும் மருந்து ஆயுள்வேதத்தில் ஆடாதோடைப் பாணியாகும். குழந்தைகளுக்கு சளிச்சுரம், மாந்தம், முட்டு நிலைகளில் அருந்தத்தீரும். தொண்டையில் ஏற்படும் இரத்தக் கசிவுகளை குணமாக்கும்.

### ஆமணக்கு

குளிர்ச்சிபொருந்திய இம்மூலிகை மலமிளக்கி மலச்சிக்கலைப் போக்கி உடலைக் குளிர்சசிபெறச் செய்யும். மூல ரோகத்திற்கு உட்பிரயோகமாகவும். வெளிப்பிரயோகமாகவும் பயன்படும்.

### வல்லாரல்

மூளைவளர்ச்சி, ஞாபகசக்திக்கு உகநதது. உடல் குளிர்ச்சியை ஏற்படுத்தி தேக உஷ்ணத்தை அகற்றும். கண, தலை குளிர்ச்சி பெறும். வாய் அவியல், வயிற்றுப்புண் முதலியவற்றுக்கு வல்லாரள் சாறும் சிறந்த புண்ணாற்றியாகத் தொழிற்படும்.

### முருங்கை

மிகவும் இரும்புச்சத்து நிறைந்த மூலிகை. இலை, பூ, பட்டை மருததுவக் குணமுடையவை. தாதுவிருத்தி, சளிஅகற்றி, இரத்தத்தை சுத்திபெறச்செய்யும் சக்தி இதற்கு உண்டு.

### கலியாண முருங்கை

கிருமிகளை கொல்லும் தன்மையுடையது. புண்களை ஆற்றும். சொறி, சிரங்கு, சளி இவற்றைப் போக்கும். மலமிளக்கி. இலை, பூ, விதை, பட்டை மருத்துவக் குணமுடையவை.

### மணித்தக்காளி

உடலுக்குக் குளிர்ச்சியை உள்ளடக்கும். கிருமியை கொலலும். மலச்சிக்கலைப்போக்கும். உடல் வெப்பத்தைத் தணிக்கும். மூல ரோகம், சிறு நீரக ரோகங்களைக் களையும்.

### குப்பை மேனி

இது கிருமிகொல்லி, புண்ணாற்றி விலா முறிவு மூலிகை, குப்பை மேனிஇலை, வேப்பிலை இரண்டையும் சமமாக வேகவைத்து உண்டால் வயிற்றுப் பூச்சி வெளியாகும்.

வயிற்றுவலி தீரும். அதிக தீன் உண்பவா் அளவான உணவு உண்பர். உட்பிரயோகமாகவும் வெளிப்பிரயோகமாகவும் பயன் படுத்தலாம்.

### நாவல்

சர்க்கரை வியாதி (நீரழிவு) ககு உகந்தது. இதன் பட்டையை அவித்துக் குடித்தால் இரத்தத்தில் உள்ள சர்க்கரை குறையும். இதனுடன் அத்திப்பட்டை, கொன்றைப்பட்டை ஆலரசம்சமூலம் கடல றஞ்சிப்பட்டை சேர்த்துக் குடிநீராகப் பருகினால் நீரிழிவு ரோகம் குணமாகும்.

### கீழ்க்காய் நெல்லி

செங்கன்மாரி ரோகத்தில் இதன் சாற்றுடன் சர்க்கரை சேர்த்து அருந்துவதால் இரத்தம் சுத்தமாகி பித்தம் தணிநது சுகமுண்டாகும் தேக சூட்டைத் தணிக்கும். உடல் குளிர்ச்சிபெறும் மூல வியாதியிலும் பிரயோகிக்க மூலம தணியும். கீழ்க்காய் நெல்லியுடன் நன்னாரி, கையாண் தகரை, இலாம்மிச்சம்வேர் சேர்த்து உண்டால வெப்பத்தைத் தணித்து உடல் குளிர்ச்சிபெறும்.

மேலும் தேஙகாய்ப் பூக்கீரை, நன்னாரி, நீர்முள்ளி, நெருஞ்சி, நாயுருவி முதலியன சிறுநீரை வெளியேற்றி உடல் வீக்கத்தை குறைக்கும் சக்திவாய்ந்தன. மாதுளை, பாகல், பிரண்டை, தொட்டாச் சுருங்கி, நெல்லி இவையும் மருத்துவக் குணம்மிக்கவையாகும். நம் நாட்டு மூலிகைகள் மருநது வசதிகுறைந்த நெருக்கடி நிறைந்த சூழல், பொருளாதாரம் குறைந்த போதிய சுகாதார வசதியின்றி அல்லல் படும் மக்களுக்கு நோய் வராமல் பாதுகாத்து குணம் பெறவும் உதவும் தன்மைவாய்ந்தன என்பதில் சந்தேகம் இல்லை.

கலியுகத்தில் மனிதர்களின் நடைமுறைப் பிறழ்வுகளால் திரிதோஷ (வாத-பித்த-கப) ஏற்றத்தாழ்வு காரணமாக உலகத்தில தோன்றும் புதுப்புது நோய்களுக்கெல்லாம் இலகுவான பின் விளைவில்லாத நற்பயன தரக்கூடிய வழிமுறைகள் இயற்கை தரும நம்நாட்டு இயற்கை வைத்தியத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

மக்களின் துயர் துடைத்து வளமான வாழ்வுபெற போசாக்குள்ளதும் சக்திமிக்கதுமான நம்நாட்டு மூலிகைகளை உபயோகித்து வளமான வாழ்வு வாழ்வோமாக!

**வைத்திய கலாநிதி**
**நா. புருஷோத்தமன்**
**(D.A.M)**

# ஈழத்தமிழர்கள் தாயகம் திரும்புவதற்கு விருப்பம்

தமிழ்நாட்டில் உள்ள அகதி முகாம்களில் உள்ள 53 ஆயிரத்து 329 ஈழத்தமிழர்கள் தாயகம் திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக இலங்கையின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி தமிழ்நாட்டிலுள்ள ஈழத்தமிழர்கள் வாழும் 102 அகதிமுகாம்களில் மேற்கொண்ட கணக்கெடுப்பின்படி இந்த விபரம் பெறப்பட்டதாகவும் அவை மேலும் தெரிவித்தன.

தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள ஈழத்தழிழர்களுக்கு உரிய உதவிகளை செயது கொடுக்கும் பணிகளுக்கு ஆழிப்பேரலை அனர்த்தம் எந்தப்பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்று அமைச்சு வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதற்கிடையில் நீண்டகாலம இந்தியாவில் இருந்து இந்தியக்குடியுரிமை பெற்றவர்கள் உட்பட சகல இலங்கை பிரஜைகளின் விபரங்களையும் இந்தியக் குடிவரவு குடியகல்வு அமைச்சு உட்பட இதர அதிகாரிகள் சேகரித்து வருகின்றனர்.

இதேவேளை, ஆழிப்பேரலை அனரத்தத்தில் இந்தியக் கரையோர மாவட்டங்கள் பாதிக்கப்பட்டபோது அங்கிருந்த ஈழத் தமிழர்கள் ஆயிரத்து 54 பேர் சிநேக மகளிர் அமைப்பினால பாதுகாப்பான இடத்திற்கு மாற்றப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க)

**யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி**

**இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2005**

இடம் : கல்லூரி மைதானம்
காலம் : 22.02.2005 செவ்வாய் பி.ப. 1.30 மணி
தலைவர் : திருமதி சூ.ஜெயவீரசிங்கம் (கல்லூரி அதிபர்)

*பிரதம விருந்தினர்*
மாண்புமிகு ந.ரவிராஜ் (பாராளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்)

*கௌரவ விருந்தினர்*
திருமதி ய.தியாகராஜா
முன்னாள் அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி

*சிறப்பு விருந்தினர்கள்*
திருவாளர் க.ஆர்வலன்
(கல்வி மேம்பாட்டுக் கழகம், யாழ்ப்பாணம்)

திருவாளர் த.சுப்பிரமணியம்
முன்னாள் சிரேஸ்ட ஆசிரியர் (பகுதித் தலைவர்), மானிப்பாய் மகளிர் கல்லூரி

**தங்களை அன்புடன் அழைக்கின்றோம்**

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

(C/[illegible]93)

# ஹெய்தி சிறையில் பயங்கரம்

# மாஜி பிரதமர், அமைச்சர் கடத்தல்



ஹெய்தியில் முக்கிய சிறையில் பயங்கர ஆயுதங்களுடன் புகுந்த கும்பல் ஒன்று, அங்கிருந்த மாஜி பிரதமர் மற்றும் மாஜி அமைச்சரைக் கடத்திச் சென்றது. அந்தப் பரபரப்பில் 500க்கும் மேற்பட்ட கைதிகள் தப்பிஓடினர்.

ஹெய்தியில் ஜனநாயக முறைப்படி அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அரிஸ்டைடு. இவர் பொறுப்பு வகித்த போது பிரதமராக இருந்தவர் யுவான் நெப்டியூன். ஓராண்டுக்கு முன் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரத்தில் அதிபர், பிரதமர் இருவரும் பதவியில் இருந்து விரட்டப்பட்டனர்.

ஹெய்தியில் இடைக்கால அரசு பொறுப்பேற்றது. இடைக்கால அதிபராக போனிபேஸ் அலெக்சாண்டரும், புது பிரதமராக ஜெராட் லெடார்யியும் பதவியேற்றனர். முன்னாள் அதிபர் அரிஸ்டைடு, தற்போது ஜமைகாவில் தஞ்சம் அடைந்துள்ளார். ஹெய்தியில் ஏற்பட்ட புது அரசுக்கு அங்கீகாரம் அளிக்க முடியாது என்று ஜமைக்கா கூறவிட்டது.


முன்னாள் பிரதமர் யுவான் நெப்டியூன் மற்றும் அவரது அமைச்சர்கள் சிலர் ஹெய்தி, போர்ட் ஆப்பரின்சில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அரிஸ்டைடு ஆதரவாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், போர்ட் ஆப் பரின்ஸ் சிறைக்குள் நேற்று முன் தினம் பயங்கர ஆயுதங்களுடன் புகுந்த மர்ம நபர்கள் அங்கிருந்த சிறைகாவலர் ஒருவரைச் சுட்டுக்கொன்றனர்.

பின்னர் மாஜி பிரதமர் நெப்டியூன் முற்றும் முன்னாள் அமைச்சர் ஜோஸ்லெர்மி பரிவெர்ட் ஆகியோரை வலுக்கட்டாயமாக இழுத்துச் சென்றனர். அந்தப் பரபரப்பில் சிறையில் இருந்த கைதிகளில் 500க்கும் மேற்பட்டோர் தப்பியோடினர். நிலைமை மிகவும் பதட்டம் அடைந்தது.

ஹெய்தியில் அமைதி மற்றும் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுள்ள பிரேசில் தலைமையிலான ஐ.நா. அமைதிப்படை உடனடியாகக் களத்தில் இறங்கி கடத்திச் செல்லப்பட்ட நெப்டியூன் மற்றும் ஜோஸ் லெர்மியை மீட்டது. அவர்கள் தற்போது ஐநாபாது காப்பு முகாமில் தங்கவைகப்பட் டுள்ளனர்.

ஹெய்தியில் தேர்தல் நடத்தி மீண்டும் ஜனநாயக அரசைக் கொண்டுவ்ர அமெரிக்கா உட்பட பல நாடுகள் முயற்சியில் ஈடுபட்டுளளன. (து)



இந்தோனேசியாவில் சுனாமியால் பாதித்த பகுதிகளை அமெரிக்க முன்னாள் அதிபர்களான ஜோர்ஜ் புஷ், கிளின்டன் பார்வையிட்டனர். அங்குள்ள லம்புக் என்ற இடத்தில் ஒரு சிறுவனிடம் அன்புடன் பேசி கைகுலுக்குகிறார் புஷ்.

## ஈரான் அணுவாயுத பிரச்சினை

# ராஜிய ரீதியில் தீர்வுகாண அமெ. விருப்பம்

ஈரான் அணு ஆயுதப் பிரச்சினைக்கு ராஜிய ரீதியிலான தீர்வு காணவே அமெரிக்கா விரும்புகிறது என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினையை இராணுவ நடவடிக்கைகள் மூலம் தீர்க்க விரும்புவதாகக் கூறுவதில் சிறிதும் உண்மையில்லை என்றும் அவர் கூறினார்.

ஜேர்மனி மற்றும் பெல்ஜியம் தொலைக்காட்சிகளுககு தனித்தனியாக அளித்த பேட்டியில் இதை புஷ் குறிப்பிட்டுளளார். இப்பிரச்சினைக்கு ராஜிய ரீதியில் தீர்வு காண விரும்புகிறோம். ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவின் ஒரே குறிக்கோள் ஈரான் அணு ஆயுதங்களை சேர்க்கக்கூடாது என்பதே. இப்பிரச்சினையில் ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கா இடையே பிரிவினை ஏற்படுத்தாதவரை ராஜிய முறையில் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண விரும்புகிறோம் என்றார் புஷ். (து)

# சூறாவளியால் படகு கவிழ்ந்தது

# முப்பத்தியேழு பேர் பலியாயினர்

வங்கதேசத்தில் ஆற்றில் சென்ற படகு சூறாவளியில் சிக்கி கவிழ்ந்ததில் 37 பேர் இறந்தனர். 100க்கும் மேற்பட்டோரைக் காணவில்லை.

வங்கதேசத் தலைநகர் டாக்கவிலிருந்து சந்த்பூர் நகருக்கு பூரிகங்கா ஆற்றில் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு ஒரு படகில் 150க்கும் மேற்பட்டோர் சென்றனர்.

படகு புறப்பட்ட அரைமணி நேரத்தில் பாக்லா என்ற இடத்தில் ஆற்றில் சென்றுகொண்டிருந்தபோது, திடீரென சூறாவளிக் காற்று வீசியதில் படகு கவிழ்ந்து பயணம் செய்த அனைவரும் ஆற்றில் மூழ்கினர். இதுவரை 37 சடலங்கள் மீட்கப்பட்டு அடையாளம் காணப்பட்டன. 100ற்கும் மேற்பட்டோரைக் காணவில்லை. மூழ்கிய படகை வெளியே கொண்டு வருவதற்கான முயற்சிகளும், மீட்புப் பணிகளும் நடைபெறுகின்றன. (து)



காஷ்மீர் மாநில தலைநகர் ஸ்ரீநகரில் கடுமையாக பனிப்பொழிவு உள்ளது. வீடுகள், மரம், செடிகள் மீது பனி படர்ந்திருக்கும் காட்சி இது.



கோங்கா நாட்டில் உள்நாட்டு போர் நீண்டகாலமாக நடந்து வருகிறது. அந்நாட்டின் கிழக்குப் பகுதி இன்னும் கலகக்காரர்களின் பிடியில்தான் உள்ளது. இதனால் அந்தப் பகுதியில் வசித்து வந்த இராணுவ வீரர்களின் மனைவி, மக்கள் உயிர் தப்பி கோமா நகருக்கு ஓடி வந்துவிட்டனர். அங்கு சேதமடைந்த ஒரு விமானம் ஒன்றையே வீடாகப் பாவித்து வசித்து வருகிறார்கள்.

# 700 கிராம் குழந்தைக்கு

# இதய அறுவைச் சிகிச்சை

குறைப்பிரசவத்தில் 700 கிராம் எடையுடன் பிறந்த குழந்தையின் திராட்சைப்பழ அளவு இதயத்தில் அறுவை சிகிச்சை நடத்தி இந்திய டாக்டர் உயிரை காப்பாற்றினார்.

அமெரிக்காவின் ஸ்டான் போர்டில லுசிலுசால்டர் பக்கர்ட் குழந்தைகள் மருத்துவமனை உள்ளது.

கடந்த ஜனவரி 30ஆம் திகதி 13 வாரம் குறைப்பிரசவுத்தில் ஒரு குழந்தை பிறந்தது.

ஜெரிக்டிலியோன் எனப் பெயரிடப்பட்ட உலகின் மிகச்சிறிய அக்குழந்தைக்கு இருதயத்தில் கோளாறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

கடந்த 6ஆம் திகதி அக்குழந்தைக்கு இருதய அறுவை சிகிச்சைப பிரிவு தலைமை டாக்டர் மோகன் ரெட்டி தலைமையில் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்து இந்தியரான டாக்டர் வி.மோகன் ரெட்டி கூறுகையில் 'குறைப்பிரசவத்தில் பிறந்த அக்குழந்தையின் தசைகள் மிக மென்மையாக இருந்தன. சுட்டுவிரல் அளவில் திராட்சைப்பழ வடிவில் இருந்த அக்குழந்தையின் இதயத்தில் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது. கைகளை குறுக்கிக்கொண்டு மிகத் துல்லியமாக இதை செய்ய நேர்ந்தது. இதன்மூலம் உயிர் பிழைக்காது என கருதப்பட்ட அக்குழந்தை தற்போது நல்ல நிலையில் இருக்கிறது' என்றார். (து)

உலக தரிசனம்

## இனவாதத்தை....

(....ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதுகூட சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்கிய அமைப்பாக இருக்கவேண்டும் எனக் கோருகின்றோம்.

ஆனால் இவை யாவும் மீண்டும் மீண்டும் உங்களால் நிராகரிக்கப்படுகின்றது. நாங்கள் எவ்வளவுதான் விட்டுக்கொடுப்புகள் செய்தாலும், அதற்கீடான நிலைப்பாடு உங்கள் தரப்பில் இல்லை என்றே தோன்றுகின்றது. இந்நிலையில் சமாதானம் தொடர்பாக உங்களுக்கு ஏதாவது அக்கறை இருக்கமுடியுமா? என்ற கேள்வியையும் எழுப்புகின்றது.

இதற்கு மேலாக கடந்த 7ஆம திகதி மாலை வெலிக்கந்தைக்கும், புனானைக்குமிடையில் நடந்த கோரத்தனமான கொலைகள், அரசின் மீது முழுமையான நம்பிக்கையை இழக்க வைத்துள்ளது மாத்திரமல்லாமல், அரசின் சமாதானம் தொடர்பான நடவடிக்கையிலும் பாரிய நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டு பரதேசத்திற்குள் இரண்டு இராணுவ முகாமிற்கு இடையில், அதுவும் நெடுஞ்சாலையில் இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளமையானது இராணுவத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் நிகழ்ந்திருக்க முடியாது. ஒன்றில் இராணுவம் கருணாவின் பெயரைப் பயன்படுத்தி இத்தாக்குதலை நிகழ்த்தி இருக்கலாம். அல்லது கருணா குழுவிற்கு இத்தாக்குதலுக்கான 100 வீத ஒத்துழைப்பை இராணுவம் கொடுத்திருக்கலாம்.

கடந்த ஒரு மாதத்திற்குள், முபபடைகளையும் முழுவீச்சில் பலப்படுத்துவதும், புலிகளின் முக்கியஸ்தர்களை கொலை செய்வதும், அரசு புலிகளைச் சீண்டி யுத்தத்தை ஆரம்பிக்க முயற்சிக்கின்றதா என்ற கேள்விகளையும் எழுப்புகின்றது.

பிரபாகரன் இறந்து விட்டார் என்பதும், கருணா கிழக்கை மீண்டும் கைப்பற்றப்போகின்றார் என்பவை போன்ற அரசினதும், சிங்கள ஊடகங்களதும் பிரசாரமும், அரசின் கபடத்தனத்தையே காட்டுகின்றது. இந்த நிலையில் வடக்கு- கிழக்கு புனர்நிர்மாண வேலைகளை இவர்கள் செய்வார்களென எவ்வாறு எதிர்பார்ப்பது?

கௌரவ சபாநாயகர் அவர்களே!

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல்வீரவன்ச வெளியிட்ட ஓர் அறிக்கையில், சிங்கள மக்கள் தொடர்ந்தும் அகதிகளாக வாழ விரும்பவில்லை. அவர்கள் விரைவாக மீளக் குடியேற்றப்படவேண்டும் என்று கூறியுள்ளார். அவரது கூற்று மிகவும் நியாயமானது. அவருக்கு நாங்கள் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். சிங்கள மக்களைப் போன்றே தமிழ் மக்களும் அகதி வாழ்வை விரும்பவில்லை. சுனாமிக்கு முன்பிருந்தே எமது மக்கள் தமது சொந்த வீடுகளை விட்டு உங்கள் பாதுகாப்பு படையினரால் விரட்டப்பட்டனர். 15 வருடங்களுக்கு மேலாக அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். அகதிமுகாம் வாழ்க்கை என்பது எப்படி உள்ளது என்பதை இப்பொழுதுதான் விமல்வீரவன்ச பார்த்துள்ளார்.

சுனாமியாவது விமல் வீரவன்சாக்களின் கண்ணைத் திறந்து தமிழனும் மனிதன்தான், அவன் தனது சொந்த இடத்திற்குப் போகவேண்டும் என்ற சிந்தனையை உருவாக்கினால் கெட்டதற்குள்ளும் ஓர் நல்லதென்று சுனாமிக்கு நன்றி கூறலாம். இல்லை சிங்களவர் மட்டும்தான் அகதிமுகாமில் இருக்கக்கூடாது தமிழன் எவ்வளவு காலத்திற்குமிருக்கலாம் என்ற எண்ணம் தொடர்ந்தும் ஜே.வி.பியினருக்கு இருக்குமாயின் சுனாமிப் பாடத்தாலும் பயனில்லை என்றே அர்த்தமாகும்.


இவற்றை ஏன் குறிப்பிடுகின்றேன் என்றால் சுனாமிக்கு முன்பிருந்தே பல ஆயிரக்கணக்கான மக்கள் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களுக்கு சொந்த வட்டுக்குப் போகமுடியாது. அவர்களுக்கு கொடுக்கும் நிவாரண உதவியும் பல மடங்கு குறைவானது. அவர்களது வீடுகளும் தோட்டங்களும் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள்தான் இருக்கின்றது. பதினைந்து வருடமாக இதேநிலைதான். ஜே.வி.பி இந்த மக்களின் மோசமான வாழ்நிலைகளைப் பற்றி இனியாவது சிந்திக்குமா? என்று கேட்க விரும்புகின்றேன்.

உலக நாடுகள் உறுதி அளித்த முழுத்தொகையும் எமக்கு கிடைக்குமா? என்பது முதலாவது கேள்வி. அதில் அரைக்கரைவாசிதான் கிடைக்கும் என்று கூறப்படுகின்றது. இவ் அரைவாசியையாவது பெற்றுக்கொள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பையும் உங்களுடன் இணைத்துக்கொள்ள வேண்டும். இல்லாதபட்சத்தில் அதுவும் உங்களுக்கு கிட்டாமல் போகலாம்.

ஏற்கனவே புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படாததால் வட-கிழக்கு உட்பட இலங்கையின் அபிவிருத்திக்கென இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளால் உறுதி அளிக்கப்பட்ட நிதியைப் பெற முடியவில்லை.

அரசின் தான்தோன்றித் தனமான போக்கும், ஜே.வி.பியின் பெரும்பான்மையின அகங்காரமும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை பிச்சைக்காரராக்கும் சூழ்நிலைக்குத் தள்ளிவிடும் என எச்சரிக்க விரும்புகின்றேன் என்றார். (ப)

# யாழ்.வண்ணை அருள்மிகு காளியம்பா



உங்கள் அவசர தேவைக்கேற்ப படங்களைப் பெற்றுக்கொள்ளவும், நவீனமுறையில் படப்பிடிப்புக்களை மேற்கொள்ளவும்

பாரத் ஸ்ருடியோ

82/1, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

சிங்கப்பூர் தரத்திற்கு ஈடான 22 கரட்டில் ஓடர் நகைகள் செய்ய சிறந்த இடம்.

ஏ.கே.நந்தபாலா நகை வாணிபம்

51A, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 0777 316022

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



அம்பாள் அடியார்களே!

யாழ்.வண்ணை கன்னாதிட்டி நல்லான் பதியில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் காளிகா பர மேஸ்வரி சித்திரத் தேரேறி அடி யார்க்கு அருள் கொடுக்கும் இந் நாளில் பெருமகிழ்ச்சி அடைகின் றோம்.

*'என்றும் வேண்டும் இன்ப அன்பு'*

இயற்கையின் அழிவாலும் ஏனைய துன்பங்களாலும் பாதிக்கப்பட்டுத் துயருறும் மக்களுக்கு மன அமைதி யையும் சுபீட்சத்தையும் அம்பாள் அருள் பாலிக்க வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

இவ் உற்சவத்தை நடாத்தும் ஆலயபரிபாலன சபை யினருக்கும், சிவாச்சாரியார்களுக்கும், வண்ணார் பண்ணை வாழ் மக்களுக்கும் அம்பாளின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர
நல்லூர். பரமாசாரிய சுவாமிகள்.




## பிரதம குருவின்



யாழ்.வண்ணை கன்னாதிட்டி அடியார்க்கு ந
சகல செல்வங்களும் அருளும் அகில உலக
அடியார்க்கு அருள் கொடுக்கும் இவ்வே
செல்வங்களையும் பெற்று பிறவிப்பிணி அக
சமாதானமும் செல்வப்பெருக்கும் அருளப்

உன்னத கலைநயம் மிக்க எழிலுறும் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள யாழ்.நகரில் தனித்துவமான ஸ்தாபனம்

சாரங்கா நகை மாடம்

157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். PHONE/FAX: 021-2480, 6059.

கிளையகம்: சாரங்கன் நகை மாடம் அன் சென்ரர்

45, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மங்கையர் விரும்பும் வண்ணங்களில் நகைகளைப் பெற்றிட நாடுங்கள்.

துர்க்கா நகைப்பூங்கா

இல.71, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021-222 2228

கடற்கோள் தந்த கண்ணீர் காய, தி
நவநாகரீக உலகில் நங்கையர் நாடு

சிறி விவேகா

இல.131, கஸ்தூரியார் வீதி,
T.P: 021

மின்சார உபகரணங்கள், எஸ்-லோன் பைப்புகள், மிதிவண்டிகள், அவற்றிற்கான உதிரிப்பாகங்கள் விற்பனையில் முன்னோடியாகத் திகழ்பவர்கள்.

சிவதர்ஷன் எலெக்ரிக்கல்ஸ்

394, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021- 222 2417.

நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் தரமிக்க அசல் 22 கரட் தங்கநகைகளைப் பெற்றுக்கொள்ள நகரில் சிறந்த ஸ்தாபனம்

வினோ நகைப்பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
PHONE/FAX: 021-2824

சகல விதமான தங்க நகைகள் 22 CT இல் புதிய டிசைன்களில் வடிவமைப்பவர்கள்.
பழைய நகைகள் விற்கப்படும்.

சரண்யா நகை மாடம்

47A, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தரமான தங்க நகைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.
குறித்த தவணையில் ஓடர்கள் செய்துதரப்படும்.

வேணி நகை மாடம்

இல.40இ, கன்னாதிட்டி வீதி, (மக்கள் வங்கி கிளை முன்பாக)
யாழ்ப்பாணம்.
T.P:0776307097

தங்கத் தரணியில் தனியிடம் வகிக்கும்

சானுகா ந

இல.200 G கஸ்தூரி

அழகிய கலைநயம் எழிலுறு தொழில் வளம்
உயர்தரமிகு தங்க நகைகளுக்கு
நாடவேண்டிய இடம்

துயா நகைப்பூங்கா

213C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T;P:021-222 5846 Hot Line:077-7840379

நாளுக்கு நாள் மாறும் நவ நாகரீக தங்க ஆபரணங்களை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்திட

நிருத்திகா ஜுவல்லர்ஸ்

177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021- 222 2694.


நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்.

சிறி சிவாஞ்சனா நகையகம்

இல.149A, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
T.P.021-222 5481

# – கன்னாதிட்டி
# ...ள் தேர்ச் சிறப்புமலர் 22-02-2005





.00மணிக்கு அம்பாள் தேரில் எழுந்தருளல்

## ...சிச் செய்தி

...ரன் பதியில் எழுந்தருளி, வழிபடும் அடியார் துயர் களைந்து ...தாதாவாகிய காளிகா பரமேஸ்வரி, சித்திரத் தேரில் தேரேறி ...ாயில் இக்கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு சகல ... மானிடப்பிறவியின் பயனை பெற்று நாட்டில் அமைதியும் ...ர்த்திக்கிறேன்.

சிவாகம கிரியா ஜோதி,
சிவ.ஜோந்திர குருக்கள் (பிரதம குரு)

## தர்ம கர்த்தா சபை தலைவரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணம் வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளிஅம்பாள் இன்று இரதமேறி அவனி யில் பவனி வருகின்றாள். அடியவர்களின் துயர் நீக்கி இன்னருள் சுரக்கும் அன்னை அருள் சுரக்க உலாவருகின்ற காட்சியைக் கண்டு மாட்சி பெற்ற பக்த கோடிகள் பலராவர்.

அன்னை தேரில் காட்சி தருகின்ற சந்தர்ப் பத்தில் ஆன்மாக்களைப் பீடித்திருக்கின்ற ஆணவம், கர்மம், மாயை ஆகிய மும்மலங்களை அழித்து முத்தியை அளிக்கின்றாள். அடியவர்கள் வாழ்வில் துன்பங்கள் நீங்கி இன்ப வாழ்வு வாழ அன்னையின் பாதாரவிந்தங்களை பணிந்து நிற்போம்.

அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்
தர்மகர்த்தா சபை, கன்னாதிட்டி.
சி.கிருஷ்ணகுமார்
தலைவர்.


அழகிய தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள ஒரே கூரையின் கீழ்
சிறி நதியா நகை மாளிகை
இல: 1 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சாருபா சிறி ரூபா நகை மாளிகை
T.P. 021-222 2709

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

நிறப்பூச்சு,(Paint) கலர்பவுடர்கள், சுண்ணாம்பு, கட்டடப்பொருட்களும் விற்கப்படும்.

Vale Murugan Traders
வேல் முருகன் வணிக நிலையம்
56.A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
56.A, Clock Tower Road
Jaffna.

உறுதியும் உத்தரவாதமும் உள்ள 22 கரட் தங்க, வைர நகைகளைப் பெற்றுக்கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்
வி.எம்.கே ஜுவல்லர்ஸ்
(தங்கப்பவுண் நகை வியாபாரம்)
இல.106, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P 222 7330.
கிளை ஸ்தாபனம்
கண்டி வீதி, சாவகச்சேரி.


நவீன நாகரீக – நங்கையரின் மனம் நிறைந்த நயம் – நாணயம் உத்தரவாதம் தற்போது புதுப் பொலிவுடன்

சிறி கருமாரி நகையகம்
இல:205/6, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (ராஜாத் தியேட்டர் கட்டடத்தில்)
T.P:021-222 5385

...ன உள்ளம் பொங்குக நலனே!
...நகைத் தேர்வில் முடிசூடா ராணி
...கை மாடம்
யாழ்ப்பாணம்.
...5501.

தங்க நகைகளை உங்கள் மனங்களின் விருப்பிற்கேற்பவும் தரமானமுறையில் குறித்த தவணையில் பெற்றிடவும்
கோபால் ஜுவல்லர்ஸ்
82/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
T.P:021-4591168

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
நியூ கல்யாணி ஜுவல்லறி
NEW KALYANI JEWELLERS
உரிமையாளர்: லயன் சு.நித்தியானந்தன் (J.P)
இல.87, கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்
(வண்ணை சிவன் கோவிலுக்கு முன்பாக)
T.P :0777 280268

தங்கப்பவுண் நகை வியாபாரம்
நவீன வடிவமைப்புகளில் தங்க ஆபரணங்களை நிதானமாகப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
கலைவாணி நகை மாளிகை
111 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

...க நகைகளின் அரங்கம்.
...க மாடம்

...வீதி, யாழ்ப்பாணம்.

நாளுக்கு நாள் மாறும் நவநாகரிக தங்க நகைகளுக்கு
பிருந்தா ஜுவல்லர்ஸ்
இல.297 (301) கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

அசல் 22 கரட் தங்க நகைகளை எழில்மிகு வடிவில் செய்து பெற்றிட நாடவேண்டிய இடம்
சிறி கார்த்திகா நகைத்தொழிலகம்
(290) 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.077-7148047

ஐஸ்கிறீம் வகைகள் குளிர்பான வகைகள் சிற்றுண்டி வகைகள் அனைத்தையும் சுவைத்து மகிழ்ந்திட
சீறிஸ் கோப்பி
133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் மனங்கவர் நகைகளுக்கு சிறந்தஸ்தாபனம்
அசோகா நகை அகம்
இல.111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
T.P: 222 6290

வினோ நகைப் பூங்கா
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
PHONE/FAX: 021 222 2824

# இனவாதத்தை கொப்பளிக்கும் அரசிடமிருந்து அனர்த்த நிவாரணத்தை எதிர்பார்ப்பது எப்படி?

## பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் ஆதங்கம்



கடற் பேரனர்த்தத்தால் இலங்கை மக்கள் பாதிக்கப்பட்டு 5 வாரம் கடந்துவிட்டது. ஆனால் 30வீதமானோருக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் சொல்கின்றது. இதில் எஞ்சியுள்ள 70வீதமானோருக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. அத்துடன் நிவாரணம் சென்றடையாத புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும் சேர்த்தால் 85 வீத மக்களுக்கு இதுவரை அரச நிவாரணம் எட்டவில்லை என்பதே அதன் அர்த்தமாகும்.

இவ்வாறான வெக்கங்கெட்ட அரசு தனது இயலாமையை உணர்ந்து அடுத்த நிமிடமே இராஜினாமாச செய்திருக்க வேணடும். ஆனால் இன்னும் அதிகாரக் கதிரையில் உட்காந்திருப்பது கேலிக்குரியதும் கண்டனதுக்குரியது மாகும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் அண்மையில் இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவ்வுரையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,


சுனாமியால் காணாமற்போனோரையும் சேர்த்தால் மொத்தம 49 ஆயிரம் மக்கள் மரணித்தும், 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாகியும், வீடு வாசல், உற்றார் உறவினர், சொத்து சுகம் அனைத்தையும் இழந்துபோயும் துன்புற்றிருக்கும் இவ்வேளையில் பூரணமாக உதவிகளை வழங்கவில்லையென வெட்கமற்றுக கூறும் ஓர் அரசு எமது நாட்டிற்கு நிச்சயமாகத் தேவையில்லை.

பல்வேறு நாடுகளும் தேவைக்கு மேலதிகமாக சகல விதமான நிவாரண உதவிகளை வழங்கியும் கூட அவற்றை பாதிப்படைந்த மக்களுக்கு கொண்டு சேர்க்கமுடியாத வினைத்திறனற்ற அரசு தொடர்ந்து அதிகாரத்தில் இருப்பதானது நிவாரண வேலைகளை இன்னும் பல வருடங்கள் பின்தள்ளும. இது பெருமளவிலான ஊழல், லஞ்சம் என்பவறறுக்கும் வழி வகுக்கும்.

அரசாங்கத்தின் கொள்கைகளும், நடவடிக்கைகளும் உதவி செய்யவேண்டுமென்ற வெளிநாடுகளின் விருப்பத்தையே சீர்குலைத்துவிடும். இதனால் பாதிப்படையப்போவது தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகம் எல்லோருமே என்பதையும் அரசு உணரத் தவறியுள்ளது.

சுனாமி என்ற பேரழிவு இன, மத, ஜாதிபேதமற்று எல்லோரையும் அழித்துள்ளது. எனவே எல்லாவற்றையும் மறந்து நாம் ஒன்றுபடவேண்டுமென்று ஜனாதிபதி அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். வேண்டுகோள் நன்றாகவே இருந்தது. ஆனால இன, மத, ஜாதிபேதமற்று செயற்படவேண்டிய ஜனாதிபதி சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கபபட்ட மக்களை எவ்வாறு கையாள்கின்றார்? சிங்களவரை ஒருவிதமாகவும், தமிழ், முஸ்லிம்களை இன்னொருவிதமாகவும் நடாத்துகின்றார். சுனாமியின் தாக்கம் அதிகளவில் வட-கிழக்கு மாகாணங்களில்தான். ஆனால் வட-கிழக்கிற்கு இதுவரை என்ன நிவாரண உதவிகள் சென்றடைந்துள்ளன.

கனரக வாகனங்கள் வேண்டும், இடிபாடுகள் அகற்றப்பட வேண்டுமென நாங்கள் பலதடவை கேட்டோம். ஆனால் வட-கிழக்கிறகு அனுப்பப்பட்ட கனரக வாகனங்களின் பட்டியல் ஒன்று அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது. இரண்டு சில்லு உழவு இயந்திரங்களும், பிக்கப் வாகனங்களும்தான் இவர்கள் கூறும் கனரக வாகனங்கள். இவற்றை தமிழ் மக்களோ, தமிழ்மக்களின் பிரதிநிதிகளோ கூறினால் இனவாதம் என்பார்கள். பொய் சொல்கிறோம் என்பார்கள். ஆனால் இன்று கிழக்கிலும் தெற்கிலும் இருக்கக்கூடிய முஸ்லிம் மக்களே, தாம் அரசாங்கத்தால் ஒதுக்கப்படுகின்றோம். உதவிகள் மறுக்கப்படுகின்றன என்பதை மிகத் தெளிவாகக் கூறுகின்றனர்.



ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்சவுக்கு சிங்கள மக்கள் சுனாமியால் ஏதிலிகளாக்கப்பட்டமை எவ்வளவு கவலையை ஏற்படுத்தியுள்ளதோ? அதேபோலவே தமிழ்க் கூட்டமைப்பினருக்கு தமிழ் பேசும் மக்களின் அகதி வாழ்வு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

எனவே இன, மத, ஜாதி பேதங்களை நாம் பார்க்கவில்லை என்ற பொய்யான அறிக்கைகளை ஜனாதிபதியும் அரசும் நிறுத்திக்கொள்ளவேண்டும். 25வருட யுத்தத்தால் வட-கிழக்கை அழித்தீர்கள். சுனாமியும் கரையோரத்தைக் காவுகொண்டது. மீதியாகவுள்ளவற்றையும் அழிக்கத்தான் அரசு திட்டமிடுகின்றதே தவிர பாதிக்கப்பட்ட சகல மக்களையும், சமனாக மதிதது அனைத்துத் தரப்பினருக்குமான நிவாரணங்களை இவ்வரசு செய்யவில்லையென்ற குற்றச்சாட்டை இந்தச் சபையில பகிரங்கமாகக கூறிக்கொள்கிறேன்.

வட-கிழக்கிற்கான நிவாரண உதவிகளைச் செய்ய மறுதலித்தமை மாத்திரமல்லாமல், வட-கிழக்கிற்கான உதவிகளைச் செய்துவந்த தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்ற தொண்டர் நிறுவனத்தையும், இது புலிகளின் அமைப்பு எனக் கூறி அவர்களின் நிவாரணப் பணிகளிலும் இடையூறு விளைவித்து வருகின்றீர்கள். இந்தநிலையில் மிகமோசமான அழிவுக்குட்பட்ட எமது பகுதியின் புனர்நிர்மாணப் பணிகளை நீங்கள் திறம்பட நடத்துவீர்கள் என நாம் எவ்வாறு எதிர்பார்ப்பது?

கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையிலும், அம்பாறையிலும் பெரும்பான்மையாக அனர்த்தத்திற்குட்பட்டது தமிழ், முஸலிம் மக்களே. ஆனால் இவ்விரண்டு மாவட்டங்களிலும் தமிழரையோ, முஸ்லிம்மையோ; அரச அதிபராக நியமித்து நிவாரணப் பணிகளை முன்னெடுக்க நீங்கள் தயங்குவதன் மர்மம் என்ன? இவ்வாறு இனவாத நோக்கும், இனவாத சிந்தனையும் உள்ள உங்களிடமிருந்து எமக்கான புனர்நிர்மாணப் பணிகளை எதிர்பார்ப்பது எவ்வாறு?

பலாலி விமானத்தளத்தை திருத்துதல், அமெரிக்காவிடமிருந்து யுத்த விமானங்களைப் பெறல், ஈரானிடமிருந்து ஆட்டிலறிகளையும், யுத்த தளபாடங்களையும் பெறுதல், பாகிஸ்தானுடன் பாதுகாப்பு ஒப்பந்தம், சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்படையை மீண்டும் கட்டியெழுப்ப புனர்நிர்மாண நிதியிலிருந்து தமக்கும் ஒதுக்குமாறு கடற்படைத்தளபதி கோரிக்கை. இன்று எல்லாம் சுனாமியின் பின் ஏற்பட்ட நிகழ்வுகள். இவை என்னத்தைக காட்டுகின்றது? உங்களது புனர்நிர்மாணப் பணியையா? அலலது அடுத்தகட்ட யுத்தத்திற்கான தயாரிப்பையா?

எனவேதான் எங்கள் பகுதியை புனருத்தாரணம் செய்ய, மீளக்கட்டியமைக்க எம்மை விடுமாறு கோருகின்றோம். பேரனர்த்தத்தின் போது மக்கள் ஒன்றுபட்டார்கள். ஜாதி, மதம், பிரதேசம் எல்லாவற்றையும் மறந்தார்கள். தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற வேறுபாடின்றி எல்லோரும், எல்லோர்க்கும் உதவினார்கள். ஆனால் அந்த நிகழ்வை சரியான முறையில் பயன்படுத்த அரசு தவறிவிட்டது.

அரசின் நடவடிக்கைகள் தமிழ், சிங்கள, முஸ்லிம் உறவில் இடைவெளியை அதிகரித்துக்கொண்டு போகுதே அல்லாமல், குறைப்பதாகத் தெரியவில்லை. ஜனாதிபதியும் அரச தரப்பினரும் அறிக்கைகளினூடாக ஆலோசனைகள் சொல்வதை விடுத்து, நடைமுறையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பக்கூடிய வேலைத்திட்டங்களைத் தீட்டி செயற்படுதல் வேண்டும்.

**சபாநாயகர் அவர்களே!**

- > புனர்வாழ்வளிப்பதற்கு போராயுதங்கள் எதற்கு?
- > புலிகளை தவிர்த்து வடக்குக் கிழக்கில் புனர்வாழ்வுப் பணிகள் சாத்தியமாகுமா?
- > தமிழர், முஸ்லிம்களை புறக்கணிக்கும் உங்களிடம் நாம் எவ்வாறு சமநீதியை எதிர்பார்ப்பது?
- > தமிழ்மொழியை பகிஷ்கரிக்கும் அரசிடமிருந்து தமிழ் பேசும் மக்கள் உரிமைகளைப் பெறுவது எப்படி?
- > சிரானை செயலிழக்கச் செய்த அரசின் சுனாமி அனர்த்த புனர்வாழ்வு வட-கிழக்கில் சாத்தியப்படுவது எப்படி?

மலையகத்திலிருந்து 7 தமிழ் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுவிட்டார்கள் எனபதற்காக, அதனை இல்லாதொழிப்பதற்காக 1948இல் இந்திய -பாகிஸ்தான் குடியுரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்து 10லட்சம் மலையக தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறித்தீர்கள். இதன்மூலம் அவர்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்து அவர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக்கினீர்கள்.

1956ஆம் ஆண்டு சிங்களம் மாத்திரம் அரச கருமமொழி என்ற சட்டத்தைக் கொண்டுவந்து தமிழ்மக்களின் வேலைவாய்ப்பு, பதவியுயர்வு போன்றவற்றை நிராகரித்திருந்தீர்கள். இதனால் பல ஆயிரக்கணக்கானோர் தமது வேலைகளை இழந்தனர். இன்று இலங்கையின் மொத்த நிர்வாகசேவையில் 2 வீதம் கூட தமிழ் மக்களில்லை.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்ததும் வடக்கில் பதவியாவிலும், கிழக்கில் திருகோணமலை, அம்பாறை போன்ற இடங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றி தமிழ் மக்களின் விகிதாசாரத்தைக் குறைத்து அதன்மூலம் தமிழ் பிரதிநிதித்துவத்தையும் குறைத்தீர்கள்.

1974ல் தரப்படுத்தல் என்ற கொள்கையின் மூலம் தமிழ் மாணவர்களின் கல்விக்கு வேட்டுவைத்தீர்கள். 1981ஆம் ஆண்டு தமிழ்மக்களின் பொக்கிசமான யாழ்ப்பாண நூலகத்தை சாம்பலமேடாக்கினீர்கள். இவ்வாறான சரித்திரத்தை உடைய உங்கள் மீது தமிழர்கள் நம்பிக்கைகொள்வது எவ்வாறு?

உங்கள் அரசியல் இலாபம் கருதி அன்றைய தமிழ் தலைமையுடன் 1957இல் செய்து கொண்ட பண்டா- செல்வா, 1965இல் டட்லி - செல்வா ஒப்பந்தத்திற்கு என்ன நடந்தது. ஒருதலைபட்சமாகவே கிழித்திதெறிந்தீர்கள்.

6 அம்ச கோரிக்கையை முன்வைத்தும் அதனையும் நங்கள் ஏற்காமல் போகவே தமிழர் விடுதலைக் கூட்டணியின தந்தை செல்வா அவர்கள் தனிநாடுதான் ஒரே வழியென்றார்கள். அப்பொழுது 1977இல் "யுத்தம் என்றால் யுத்தம், சமாதானம் என்றால் சமாதானம்" என்று முழங்கினீர்களே நீங்கள். நங்கள் வடகிழக்கிற்கான நிவாரண நடவடிக்கைகளை இனபோத மற்று மேற்கொள்கிறீர்கள் என்பதை நாம் எவ்வாறு நம்புவது?

தமிழ்மக்களின் நீண்ட போராட்டத்தின் பின் 15 வருடங்களுக்கு முன்பாக தமிழும் அரச கரும மொழியென ஓர் சட்டதிருத்தத்தை பாராளுமன்றில் நிறைவேற்றினீர்கள். அது எவ்வளவு தூரம் நடைமுறையில் உள்ளது. பாராளுமன்றத்தில முக்கிய கூட்டங்கள் இன்றும் தனிச் சிங்களத்திலேயே நடைபெறுகின்றன. தமிழை முழுமையாக அமுல்படுத்த பாராளுமன்றமே இதுவரை போதிய நடவடிக்கை எடுக்கவில்லை.

கடந்த வாரம் சபாநாயகர் நடாத்திய கருத்தரங்கில் பேசும்பொழுது தான் சிங்களத்தில் பேசுவதாகவும், சிங்களத்தில கையெழுத்திடுவதில் பெருமையாக இருப்பதாகவும் கூறினார். அதனைப்போன்று தமிழர்கள் விரும்புவார்கள் என்றும் கூறினார். ஆனால் அவரின் தலைமைத்துவத்தின் கீழேயுள்ள பாராளுமன்றத்திலேயே தமிழுக்குரிய இடம் இல்லை. இப்படியான ஜனாதிபதி செயலகம், ஏனைய அமைச்சுக்கள் எவ்வாறு இருக்கும். அரச கருமமொழியென சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட தமிழை நடைமுறைப்படுத்தாதவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கை புனர்நிர்மணம் செய்வார்கள் என எவ்வாறு நம்பமுடியும்.

யுத்தத்தால் மிகவும் சேதமுற்ற வட -கிழக்கை மீளக்கட்டி எழுப்புவதற்காக புலிகளையும் - அரச தரப்பினரையும் உள்ளடக்கிய அவசர நிவாரணப் பணிகளுக்கான அமைப்பென "சிரான்" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதில் அரசு பல முட்டுக்கட்டைகளைப் போட்டது. இதனால் 'சிரான்' என்ற அமைப்பும் இயங்கமுடியாமல் போகவே புலிகள இடைக்கால நிர்வாகம் ஒன்றை கோரும் நிலைமைக்கு தள்ளப்பட்டார்கள். தான் உருவாக்கிய அமைப்பையே முறையாக செயற்படுத்த ஒத்துழைக்காத இவ் அரசாங்கம், சுனாமியால் பாதிக்கப்பட்ட வட -கிழக்கை புனர்நிர்மாணம் செய்யுமென எவ்வாறு நம்புவது?

இவை எல்லாம் அரசியல் ரீதியான விடயங்கள். சுனாமிப் பாதிப்பென்பது மனிதாபிமானப் பிரச்சினை. அரசியலையும், மனிதாபிமானப் பிரச்சினையையும் ஒன்றாகப் போட்டு குழப்பக கூடாது. அப்படியாயின சுனாமியால பாதிப்படைந்த இடங்களைப் பார்வையிட வந்த ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் கோபி அனான் மற்றும் இராஜதந்திரிகளை ஏன் வடக்கிற்கு அனுப்பவில்லை.

ஏற்கனவே கூறியதுபோன்று மொத்த சேதத்தில் 70வீதம வடக்கு - கிழக்கில் நிகழ்ந்துள்ளது. தெற்கில் எவ்வாறு காலி மோசமான அனர்த்தத்தைச் சந்தித்ததோ அதனைப் போன்றே வடக்கில் முல்லைத்தீவும், மருதங்கேணியும் மோசமான இழப்புகளைச் சந்தித்தது. இந்நிலையில் சேதங்களைப் பார்வையிட வந்த ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தையும் ஏனைய நாடுகளின் பிரதமர்களையும், இராஜதந்திரிகளையும் வடகிற்கு போகவிடாமல் தடுத்தது இனவாதத்தின் உச்சக் கட்டம் அல்லாமல் வேறென்ன?

இந்த நிலையில் தான் அரசு மீது முழுமையாக நம்பிக்கையிழந்த சூழ்நிலையில் எமது மக்களின் துயர்துடைக்க அரசும் - புலிகளும் இணைந்த ஓர் பொது அமைப்பு நிறுவப்படவேண்டுமென வலியுறுத்துகின்றோம். இதிலும்கூட மூன்றினத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையில் இவ் அமைப்பு அமையவேண்டுமெனவும் கோருகின்றோம். சுனாமிக கெதிரான இணைநத செயற்பாடு அமைதிப்பேச்சுவார்த்தைக்கும் கால்கோள் வகுக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

சபாநாயகர் அவர்களே!

உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் புனர்நிர்மாணத்திற்கு ஏறத்தாழ 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவையெனவும், இதில் 64வீதத்திற்கு மேற்பட்ட தொகை வட-கிழக்கு புனர்நிர்மாணத்திற்கு ஒதுக்கப்படவேண்டுமெனவும் கூறியுள்ளனர்.

இந்நிலையில் வட-கிழக்கின் யதார்த்த நிலைகளையும் கணக்கிலெடுத்து செயற்படுவதுதான் சிறப்பாக இருக்கமுடியும். வட-கிழக்கின் கணிசமான பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழும் அவர்களது ஆளுகையின் கீழும் இருக்கின்றதென்பது முதலாவது யதார்த்தம்.

அரசாங்கத்தின் சட்டம், ஒழுங்கு,கட்டுப்பாட்டிற்குள் இது இல்லை என்பது இரண்டாவது யதார்த்தம்.

இந்தநிலையில் விடுதலைப்புலிகளைத் தவிர்த்து சுனாமி நிவாரணப் பணியில் ஈடுபடமுடியாதென்ற உண்மையை அரசு புரிந்துகொள்ளவேண்டும். அதனடிப்படையில்தான் வட-

> *இன ஒற்றுமை என்பது ஊடக அறிக்கைகள் மூலம் சாத்தியப்படாது என்பதை ஜனாதிபதி உணரவேண்டும்.*

கிழக்கில் சுனாமி விடயங்களைக் கையாள ஓர் பொதுமைப்பட்ட அமைப்பு தேவையெனக் கூறுகின்றோம்.

ஜே.வி.பி, ஈ.பி.டி.பி போன்ற அமைப்புக்கள் புனருத்தாரணப் பணியில் புலிகள் இணைவதை விரும்பாமல் இருக்கலாம். ஆனால் புலிகளை இணைக்காமல் வடக்கு-கிழக்கில் புனருத்தாரணப் பணிகள் சாத்தியமில்லை என்பதை இவர்கள் நன்கறிவார்கள். எனவே, அடிப்படையில் இதனை எதிர்ப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கு நிவாரணம் செல்லவிடாமல் தடுப்பதுதான் இவர்களது நோக்கமாகவுள்ளது.

இவர்களது கருத்துக்களுக்கு இடம்கொடுத்தால் வட-கிழக்கிற்கு நிவாரண உதவிகளே சென்றடையாமல் போய்விடும் என்பதை அரசாங்கம் உணரவேண்டும்.

சமாதானத்தை உருவாக்க ஓர் துரும்பு கிடைத்தாலும், அதனைப் பற்றிப் பிடிப்பதுதான் சமாதான விரும்பிகளின் நோக்கமாக இருக்கமுடியும். அந்தவகையில் சுனாமி அனர்த்தம் எனபது எமது நாட்டையும் மக்களையும் மிக மோசமாகப் பாதித்தாலும், அரசும் தமிழர் தரப்பும் இணைந்து வேலை செய்வதற்கான ஓர் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுத்தது. நம்பிக்கையைக் கட்டி எழுப்பவும், பேச்சுவார்த்தையை தொடரவும இது நல்லதொரு வாய்ப்பாக இருந்தது. ஆனால் அரசாங்கத்தின் மெத்தனப்போக்கும், தவறான கொள்கையும், அப்படி யான சந்தர்ப்பத்தையே இல்லாமல் செய்துவருகின்றது.

இருமுறை புலிகளின் சமாதான செயலகமும், அரசின் சமாதான செயலகமும் பேச்சுவார்த்தை நடாத்தியும் கூட இரு தரப்பும் இணைந்த ஓர் அமைப்பை உருவாக்கமுடியவில்லை என்பது மிகவும் கவலைக்குரியது. இதுதொடர்பாக புலிகள் முன்வைத்த பல்வேறுபட்ட வரைபுகளும் அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதி புனருத்தாரணத்தில் நாம் உரிமை கோரவில்லை. ஆனால் எமது வாழ்விடமான வடக்கு- கிழக்கு மாகாணத்தில் எமது இழப்புக்கள் என்பது மிக அதிகமானது. இப் புனருத்தாரண நடவடிக்கையை செய்வதற்கே நாம் இணைந்த அமைப்பொன்றைக் கோருகின்றோம்.

(.... ஆம் பக்கம் பார்க்க)

# அகலக் காலூன்றி அரும்பணி புரியும்

# சாரணர் இயக்கம்

அகிலம் அனைத்தும் அகலக் காலூன்றி அரும்பணி புரியும் சாரணர்களின் எண்ணிக்கை இரண்டரைக் கோடிக்கு மேலாகும். சாரணியர்களின் எண்ணிக்கை ஒன்பது லட்சத்திற்கு அதிகமாகும். இப்பரந்த எண்ணிக்கையினர் தியாக சிந்தையோடும், அன்போடும் நினைவுகூரும் நன்னாள இதுவாகும. சாரணியத்தின் பிதாமகா் பேடனபவல் தினமெனவும் இதனை அழைப்பா். யாவற்றிற்கும் மேலாக சாரணியா் சிந்தைக்கு விருந்தாகும் சிந்தனைக்குரிய நாளாகவும் அனுஷ்டிப்பா்.

சாரணிய ஸ்தாபகரும் சாரணியா் ஆரம்பகா்த்தாவுமான றொபேட் ஸ்ரீவின் சன்சிமித் பேடன் பவல் பிரபுவினதும் சீமாட்டி பேடன்பவலினதும் (ஒலெவ) ஜெனன தினம் மாசித்திங்கள் 22ஆம் நாளாகும். எனவேதான் கைமாறு வேண்டாக் கடமை வர்ா்களின் ஜெனன தினத்தையே உலகளாவிய ரீதியில் உலக சாரணா் தினமாகச் சாரணரும், சாரணியரும் பெருமனத்தோடு கொண்டாடுகின்றனர்.

சாரண, சாரணியா் அமைப்பின் சிறப்பம்சம் யாதெனில் சிறுவா்கள் குணாதிசயங்களை முன்னிலைப்படுத்தி வயதெல்லையை அடிப்படையாகக் கொண்டு பிரிவுகளை வகுத்தமையேயாகும். அப்பிரிவுகளுக்கேற்ப தலைவா்களையும் கொண்டுள்ளது.

பிதாமகா் பேடன்பவல் ஒரு பேட்டியில் உளப்புளகாங்கிதத்தோடு பினவருமாறு பகா்கின்றாா்.

"சாரணியம் நன்கு வளா்ந்துவிட்டது. அது தானாக வளரும். நான இனி ஒனறும் செயயவேணடியதில்லை''

இக்கூற்றினை ஆழமாக - அகலமாகச் சிந்திப்பின் எமது பணியென்ன என்ற வினா எழுகிறது. சிந்தனைத் தெளிவோடு "தானாக வளர" முகமகொடுபபோமாக. சிந்தனை சீரிதாக அமையட்டும்; அமையுங்கள்.

## சாரணியமும் எம் மண்ணும்

எம் மண்ணின் விடிவிற்கும், இளம் சமுதாயத்தின் வாழ்வின் வனப்பிற்கும், அதன் எழுச்சிக்கும், உயா்வற்கும் சாரணியம் துணைநிற்கிறது. ஆதலால் சாரணியமும், சாரணியத்தின் பிதாமகா் பேடன்பவல் பிரபுவும் என்றும் நன்றே நினைவுகூரப்படவேண்டும்.

வெறுமனே சாரணியம் என்று பேசிக்கொண்டாற் போதாது. சாரணியம் எதனைப் புகட்டிநிறகிறது எனத் தினமும் ஒருகணம் சிந்திக்கவேண்டும். அதன் உட்பொருளை சரிவர வெளிக்கொணரவேண்டும். சத்தான அறிவுக் கருவூலங்களை முத்து முத்தாகப் பெற்றிடவேண்டும். அதன் செழிபபிலே சததான வாழ்வுபெற நாளும் உழைத்திடவேண்டும்.

சாரணா் சீருடையின் மகத்தான பெருமையை உய்த்துணரவேண்டும். அந்நிலையிற்றான் அனைவரும் சாரணா்கள், சாரணத் தலைவா்கள் என்ற தகுதியைப் பெறமுடிகிறது. இன்றைய அணுயுகத்தில் ஆற்றவேண்டிய பங்களிப்பின பருமனை, பரிமாணத்தை உய்த்துணரவேண்டும்.

கல்விப்பணியில், சமூகப் பணியில், தேசப்பணியில் சாரணியத்தின் மூலம் எத்துணைக்கு சேவையின் சிகரங்களாககலாம் எனச சிந்திக்கவேண்டும. சமூகம, சாரணியம் எதனை வழிநடாத்துகிறது என்பதை அறிந்திருத்தல் அவசியமே. பெற்றோரின் பங்களிப்பு மேற்படி கூற்றின் வெற்றிககு உறுதுணை புரியுமென்பதில ஐயமில்லை.

சாரணியப் பயிறசிகளைக் கடைபபிடிகக, நடைமுறைப்படுத்த பெற்றோா் தம் சிறாா்களை ஆறறுபபடுத்தவேண்டும். அப்பணியின் சீாமையை சமூகம், குடும்பம், தேசம் எனற கண்ணோட்டத்தில அவதானிப்போமாகில்:-

* பேடன் பவல் மூன்று வயதில் தந்தையை இழந்தபொழுதிலும் - தாய்ப் பாசததுடனும் சகோதரத்துவ ஒற்றுமையுடனும் வாழ்ந்து பெருமகனானாா். தாய் சமையற் கலையையும, சகோதரா்கள் ஏனைய கலைகளையும் கறபிததனா். இவை அவரின் வாழ்வின் உயா்விற்கும் சிறப்பிற்கும் வித்திடடன. இன்று எம் இளஞ் சமுதாயததில் அத்தகைய நிலை அறறுப்போகின்றது. அதனை நிவாததிசெய்ய யாது வழி எனச் சமுதாயம் ஏங்கிநிற்கின்றது.

*கல்வியும் மண்பற்றும் சமுதாயமும்

கல்வியைக் கற்கவேண்டிய காலத்தில் தனது குடும்ப ஏழ்மையறியாது கற்றுத் - தேர்ந்தாா். தேசப்பற்றுக் காரணமாக இராணுவப் பணிபுரிந்தாா். பணி தந்த அனுபவத்தால் போரால் எவ்வித பயனும் இல்லை எனக் கற்றுத் தெரிந்தார். இளஞ்சிறார்களை நல்வழிப்படுத்தின் எதனையும் சாதிக்கலாம் எனும முடிவுக்கு வந்தாா். அதன் இலச்சினையாக சமாதானத்தின் சினனமாக சாரணியத்தை ஆரம்பித்தாா். இராணுவத்தில் நாட்டுககாக உழைத்த பெருமகனாா் சாரணியத்தின் மூலம் சமாதானத்திறகாக உழைத்தாா். இன்று எம் நிலை என்ன? நாட்டுப்பற்றா- மொழிப்பற்றா - மண்பற்றா - இனப்பற்றா சமாதானமா என்ற வியாபக வியாகூலத்தில் நனைந்துள்ளோமே.

*முழுமையான அா்ப்பணிப்புடன் பணி

இவா்களது குடும்பமே சாரணியத்தில் ஈடுபாடுடையதாகவிருந்தது. இந்நிலைப்பாடு சாரணியத்தை முன்னெடுததுச்செலல பல வழிகளில் உதவியது. தமது வாழ்வையும், காலத்தையும அாப்பணித்த இவா்கள் பொருளையும் சாரணிய வளா்ச்சிக்காக, தியாக சிந்தையுடன் செலவிட்டனா். இதனால் இன்று அகில உலகமே பேடன்பவல் பிரபுவை, ஒலெவ பேடன்பவல் அம்மையை நன்றியுடன் நினைவுகூருகிறது. அணையாத விளக்கெனச் சுடா்விட்டுக கொண்டு செந்நெறி காட்டும் பிதாமகா் இளம் சமுதாய விருஷ்டிக்குக் கட்டியம கூறிநிற்கின்றாா்.

சாரணியத்தில் ஓா் இளைஞன் சோ்வதனால் சமுதாயததில் பின்வரும் மாற்றங்கள் இடம் பெறுகின்றன.

1.தாய், தந்தைப் பாசம், சகோதரத்துவ ஒற்றுமை, மகிழ்வான குடும்பக் கட்டமைப்பு.

2.சமயப்பற்று தேசப்பற்றுக் கொண்ட சமுதாயம்.

**த.நா.போஜன்**
**பயிற்றுனர் தலைவர்**

3.தீய சுயநலப் பழக்கவழக்கங்களில் இருந்து விடுபடல், விடுவித்தல்.

4.கல்வி சாா்ந்ததும், புறநிலைச் செயற்பாட்டிலும் துணை நிற்றல. விசேட ஆற்றல்கள் மேம்படுததல்.

5.நாட்டின் நற்பிரஜையாக உருவாக்கல்.

6.சிறந்த தலைமைத்துவப் பண்பினையும், ஆற்றலையும் மேம்படுத்துகின்றது.

இவற்றின் மூலம் எமது இலக்கினை அடைய வீட்டாா் முதலில் கவனம் செலுத்துதல் வேண்டும். சாரணியப் பயிற்சிகளைத் தலைவா் ஒழுங்கே வழங்குதல்வேண்டும். அதனைப் பெற்றோா் வீட்டில் நடைமுறைப்படுத்த ஊக்கமும், ஆக்கமும் கொடுத்தல்வேண்டும். □

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கல்வியங்காடு)

இடைக்காடு மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநா் போட்டி நாளை புதன்கிழமை மாலை 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபா் சி.சித்திரவடிவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழவில், பிரதம விருந்தினராகக் கோப்பாய்ப் பிரதேச செயலா திருமதி அஞ்சலிதேவியும், சிறப்பு விருந்தினா்களாக கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி சிவஞானசுந்தரம், வடக்கு கிழக்கு மாகாண தபால் திணைக்கள ஓயவுபெறற அத்தியட்சகா் சி.நல்லதம்பி ஆகியோரும கலநதுகொள்ளவுள்ளனா். (க-74)

***

(யாழ்ப்பாணம்)

யா/நல்லூா் தெற்கு ஸ்ரீவிக்னேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டு விழா இன்று பி.ப 2மணிககு பாடசாலை மைதானததில் அதிபா் திருமதி .சண்முகானந்தன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளா் த.இராசலிங்கம், அாியாலை ஸ்ரீபாா்வதி வித்தியாசாலை ஆசிரியை திருமதி பி.இராஜலிங்கம் அகியோா் பிரதம விருந்தினா்களாகக் கலந்துகொள்வா்.(து)

***

(யாழ்ப்பாணம்)

யா/மானிப்பாய மகளிா் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநா் போட்டி இன்று பி.ப 1.30 மணிக்கு கல்லூரி மைதானததில நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபா் திருமதி. சூ.ஜெயவீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினா் ந.ரவிராஜும் கௌரவ விருந்தினராகக் கல்லூரியின் முன்னாள அதிபா் பீ.தியாகராஜாவும், சிறப்பு விருந்தினா்களாக யாழ்.கல்வி மேம்பாட்டுக் கழகத்தைச சோ்ந்த க.ஆா்வலன, ஆசிரியா் த.சுப்பிரமணியம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனா். (க)

***

(யாழ்ப்பாணம்)

யாழ்/வட்டு இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநா் போட்டி இன்று பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில், பாடசாலை அதிபா் ச.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின பிரதிக் கல்விப் பணிப்பாளா் சு.சுந்தரசிவமும், சிறப்பு விருந்தினராக வலிகாமக் கல்விவலயக் கணக்காளா் நா.யோகேந்திரராஜாவும, கௌரவ விருந்தினராக சங்கானை பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளா் அன்புவும் கலந்து கொள்ளவுள்ளனா். (க-19)

## பொதுக்கூட்டம்

(பொன்னாலை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வேலணைப் பிரிவின் அலகு 2இற்கான அங்குராா்ப்பணப் பொதுக்கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு புங்குடுதீவு சா்வோதய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் புங்குடுதீவு, நயினாதீவு பிரிவுகளைச் சோ்ந்த சகல உறுப்பினா்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ப-49)

## மஹோற்சவம்

பொலிகண்டி சல்லியம்பதி வீரகத்தி விநாயகா் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் கடந்த 15ஆம் திகதி செவவாய்ககிழமை கொடியேற்றத்துடன ஆரம்பமாகித் தொடா்ந்தும் நடைபெறறுவருகின்றது.

இதில் நாளை புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் 24 ஆம் திகதி வியாழக்கிழமை தீா்ததோற்சவமும் இடம்பெறவுள்ளது. (ப-09,105)

# வளமான வாழ்வுக்கு வழிகாட்டிய பேடன் பவல் பிறந்ததினம்



மனிதக் காரணியை வளமுடைய காரணியாக, தோ்ச்சி கொண்டதாக, அனுபவம் வாய்ந்ததாக ஒவ்வொருவரிடமும் உள்ள பலவேறு ஆற்றல்களை வெளிக்கொணா்ந்து முழு மனிதனாக்குகின்ற அமைப்பே சாரணிய அமைபபாகும். அச்சாரணியத்தை உதயமாக்கச் செய்த றெபெட் ஸ்டீவன் ஸ்மித் பேடன் பவல் என்ற மாமேதையின் 145 ஆவது பிறந்ததினம் பெபரவரி மாதம் 22 ஆம் திகதியாகும். இதனை உலகிலுள்ள சாரணாகள கொண்டாடுகின்றனர்.

இவா் 1857 பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி இங்கிலாந்திலுள்ள இலணடன நகரில் பிறந்தாா். இவரது தந்தை ஒக்ஸ்பேட் பல்கலைக்கழக பேராசிரியா் ஏ.ஜி. பேடன் பவல ஆவாா். தாய் பிரித்தானிய கடறபடைத் தளபதி ரி.ஸமித் என்பவரது மகளாவாா். ஒனபது அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தில் பிறந்த பேடன் பவல் 1880 இல் இலண்டன் சாட்டட் ஹவுஸ் கல்லூரியில் புலமைப்பரிசில் சம்பளத்துடன் கற்பதறகு சோததுககொள்ளப்பட்டார்.

கல்லூரி வகுபபுகளில் கற்பதைவிட இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் மிகவும் ஆர்வமுடையவராகக் காணப்பட்டாா். உதைபநதாடடம், நடிபபு, சித்திரம்,விருப்புடையவராகவும் திறமையுடைய இவா் 19ஆவது வயதில் படிப்பை முடித்துவிட்டு இராணுவத்தில் இணைந்து தனது நாட்டிற்காகப் பணியாற்றினார். திறமையுடைய இவர் இராணுவத்தில் பதவி உயா்வுகளைப் பெற்றுக்கொண்டாா். முதலில் இந்தியாவுக்கு உப லெப்டினன்ட்டாக அனுப்பபபட்ட இவா் பல வெற்றிகளைத் தட்டிக்கொண்டவராகையால் 26 வயதில் தளபதியாகப் பதவியுயாவு பெறறாா.

ஆபிரிக்காவிலுள்ள ஸுலு சாதியினருக்கும, கஸாந்தி சாதியினருக்கும், மடோபினி சாதியினருக்கும் எதிரான யுத்தத்தில் யுத்த நுட்பமுறைகளைக் கையாண்டு புகழீட்டினார்.

இவரது திறமையைக் கண்ட ஆபிரிக்க மக்கள் அவா்களது மொழியில் 'கிம்பிஸா' அதாவது ஒருபோதும் துயில் கொள்ளாத ஓநாய் என சிறப்புப பெயா் கொண்டு அழைத்தனா். 1889இல் கேணல் பதவி பெற்ற சிறுபடையுடன் ஆபிரிககா போயா யுத்தத்தில் ஈடுபடடு வெற்றியீட்டியதன் மூலம் மேஜராக்கப் பட்டார்.

இவ்வாறாக யுத்த அனுபவமும், சமூக சிந்தனையும் கொண்ட 'ரீன் ஏஜௌஸ்' என்று அழைக்கப்படுகின்ற (14 - 19) இளைஞர்கள் அனாவசியமாக அலைநதுதிரிவதை அவதானிதது இளைஞா்கள் நேரத்தைப் பயனுடையதாக மாற்ற 1907 ஆம் ஆண்டு யூலை 25ஆம் திகதி பிறவுண்ஸ் தீவிலுள்ள 'பூல்' துறைமுகத்தில் 20 இளைஞா்களுடன ஒரு சாரணா் பயிற்சிபபாசறையை ஆரம்பித்தாா். இபபாசறை பயனுடையதாக அமைய 1901 ஆம் ஆண்டு சாரணியத்துக்கு உதவககூடிய நூல ஒன்றை வெளியிட்டார். 1909இல் செப்டெம்பர் 4ஆம் திகதியன்று பளிங்கு மாளிகை ( கிறிஸ்டல் பலஸ்) என்னுமிடத்தில் 11000 பேர் கொண்ட ஒரு மாநாட்டை கூட்டி சாரணியத்தில் வளா்ச்சியைக் காண்டார்.

1910ஆம் ஆண்டு சாரணா் தந்த அடெல்ஸ் அம்மையார் யுவதிகளுக்கான தனியான வழிகாட்டிகள் இயக்கம் ஒன்றினை ஆரம்பித்தார்.

1912ஆம் ஆண்டு ஒலோவ சென்கிளேயர் சொமஸ் என்ற பெண்ணைத் திருமணம் செய்தார்.

1912இல் இலங்கையில் சாரணா இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. மாத்தறை கிறிஸ்து அரசா் கல்லூரியில் எல்.ஜி.ரி.வில்ஷன் ஏற்பாட்டில் இது நிகழ்ந்தது.

பிரித்தானிய பொருளாதாரத்தல், ஆட்சியில் முதன்மை வகித்த காலத்தில் இலங்கையிலும் பாடசாலைகள் ஊடாக மாணவாகளுக்கு சாரணிய இயக்கம புகுத்தபபடடது. பாராளுமன்றச் சட்டத்தில் (1956) சாரணிய அமைப்பு இடம்பெற்றது.

இன்று பொருளாதாரத்தில் உலகநாடுகள் வாிசையில் பிாித்தானியா 8ஆவது இடத்தில் நிற்கின்றது. பிரித்தானியர் ஆட்சியால் இலங்கையில் அறிமுகம் செய்யபபடட சாரணிய அமைபபு மாணவா்களுக்கு சீருடை, நறபழக்கவழக்கங்கள், நேரம் தவறாமை, ஒழுங்குமுறையான செயற்பாடு என்பன போன்ற புதிய போக்கை சமூகத்தில் புகுத்தியதுடன் 'சேவை செய்தல்' என்ற புதய முறைமையினையும் இநது, பௌத்த, இஸ்லாமிய சமூகத்தினருக்குப் புகட்டியுள்ளது.

**பொ.ஸ்ரீஸ்கந்தராசா**
**யாழ்.இந்துக் கல்லூரி**

இவ்வாறான பழக்கத்தினால் அனா்த்தங்கள் ஏற்படும் போது நாம் சாரணியம் மூலம் சேவை செய்கின்றோம் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நல்ல ஏற்பாட்டை ஏற்படுத்திய சாரணியத் தந்தை பேடன் பவல் அவா்களை ஞாபகப்படுத்தி அவரது நல்ல இயல்புகளை எமது கலாசராத்திற்கு ஏற்ப ஏற்று மேற்கொண்டு நடப்போமாக! □

# முரண்பாடுகள் நெருக்கடிகள் மத்தியில்

தமிழீழ விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கமும் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு இன்றுடன் மூன்று வருடங்கள் பூர்த்தியாகின்றன.

போர்நிறுத்த ஒப்பந்தம் ஒரு வயதினைப் பூர்த்தி செய்த போது அப்பொழுது பதவியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அதனை வைபவரீதியாக அனுஷ்டித்தது.


ஆனால் கடந்த வருடம் யுத்தநிறுத்த ஒப்பந்தம் தனது இரண்டாவது வயதை நிறைவு செய்யும் பொழுது சிங்கள தேசம் அதனை வைபவ ரீதியாக அனுஷ்டிக்கும் நிலையில் இருக்கவில்லை. பன்னிரண்டாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதில் ஐக்கிய தேசியக கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முனனணி மற்றும் பிரதான கூட்டணிக் கட்சிகளும், ஏனைய கட்சிகளும் அக்கறை காட்டி வரும் நிலையில் தான் போர்நிறுத்த ஒப்பந்தம் இரண்டாவது ஆணடைப் பூர்த்தி செய்து மூன்றாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்தது.

இக்கால எல்லையில் தமிழீழ விடுதலைப புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் ஈடு செய்ய முடியாதன. நெடுந்தீவுக் கடற்பரப்பில் மூன்று போராளிகளையும், மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் முக்கிய போராளிகளான பாவா, சேனாதிராஜா ஆகியோரையும் அண்மையில் வெலிகந்தப் பகுதியில் மட்டு.-அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்பட போராளிகளையும் அரசின் கபட நடவடிக்கையால் இழந்திருக்கினறனர்.

பல்வேறு முரண்பாடுகள்,நெருக்கடிகள் மத்தியிலும் கடந்த மூன்று வருடகாலம் போர் நிறுததம் அமுலில் இருந்தமை மிகவும் வெற்றிகரமானதொரு நெடும் பயணம் என்றே கருத வேண்டும்.

கடந்த மூன்று வருட காலங்களுக்கு முன்னர் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்பாடுகள் ஆறேழு மாதங்களுக்கு மேல் நீடித்திருக்கவில்லை. அவை முறிவடைந்து போயுள்ளதுடன் நீண்டகாலப் போருக்கும் வழிவகுத்தன.

1987இல் இலங்கை, இந்திய உடன்படிக்கை கைச்சாத்தாகிய அதேவருடம் ஒக்டோபரில் யுத்தம் வெடித்தது. இந்தியப்படைகள நாட்டைவிட்டு வெளியேறிய பின்னர்



தொடர்ந்து அரசுக்கும்,புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் நீண்ட காலம் நீடிக்கவிலலை. புலிகளை வைத்து அந்நியப்படைகளைப் வெள்ளியியேற்ற திட்டமிட்ட அப்போதைய ஜனாபதிபதி பிறோமதாஸ, இந்தியப்படையினர் வெளியேறியதுடன் புலிகளை அழிக்கத் திட்டமிட்டார்.

அவரது கணிப்புத்தவறாகிப்போனது. மீண்டும் யுத்தம் இரண்டம் கட்ட ஈழப்போர் சுமார் 4 வருடகாலம் நீடித்தது. மக்கள் யுத்தத்தில களைப்படைந்தனர் இரணுவமும் சோரும் நிலைக்கு வந்தது. ஐ.தே.க. அரசாங்கம் தீவிரமான - புலிகள் அழிப்புக் கொள்கையை அமுல்படுத்தியபோதும் புலிகளின் உறுதியான தீவிர பதில் நடவடிக்கைகள் இது முடிவற்ற யுத்தம் என்ற உண்மையை சிங்கள மக்களுக்கு உணர்த்தியது.

தொடர்ந்து 4 வருடங்கள் நீடித்த யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமாதானம், அமைதி என்பன ஒரு கனவாகவே தென பட்டன. இந்தச் சூழ்நிலையில் தான் சந்தரிகா குமாரதுங்க அரசியலில் பிரவேசித்தார். நாட்டில் அமைதியை, நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவேன் என்று சந்திரிகா முன்வைத்த கருத்துக்கள் மக்கள் மத்தியில் வெகு வரவேற்பைப்பெற்றன. புலிகளுடன் இணைந்து இனப்பூசலுக்குத் தீர்வு காண்பேன் என்ற இவரது வாக்குறுதியில்சிங்கள மக்கள் மட்டுமன்றி, தமிழ் மக்களும் பெருமளவில் நம்பிக்கை வைத்தனர்.

இந்த நம்பிக்கை 1994ஆம் ஆண்டில் நடந்த பாராளுமன்ற தேர்தலில் வாக்குகளாய்க் குவிந்தன. சந்தரிகாவின் கட்சி சந்தரிகா தலைமையில அரசமைத்ததைய டுதது இதே வருடம் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சந்திரிகா பெரு வெற்றி. பெற்றார். இதன் பின்னர் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி யுத்தத்தை நிறுத்தும் மோதல் தவிர்ப்பு உடன்பாடும் கைச்சாததாகியது. உற்சாகமாய்த் தொடங்கிய பேச்சுவார்த்தைகள் போகப்போக தள்ளடாத் தொடங்கின.

அரசாங்கத்தில் ‘ஏனோ தானோ' என்ற நடவடிக்கையால் திடீரென யுத்தம் வெடித்தது.

1995ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 3வது ஈழப்பேர் ஆரம்பமானது. இதன் பின் இந்த யுத்தம் தொடர்ந்து சுமார் 7 வருடங்கள் நீடித்தன. இந்த ஏழு வருடங்களை போர் மக்கள் மத்தியிலும், படையினர் மத்தியிலும், புலிகள மத்தியிலும் பலத்த மாறுதல்களை ஏற்படுத்தின.

இந்த யுத்தம் அரசாங்கத்திற்கு பெருமளவு பொருள்,சொத்து இழப்புகளை ஏற்படுத்தியது மட்டுமன்றி மக்களின் சொல்வாக்கிலும் பலத்த வீழ்ச்சியினை ஏற்படுத்தியது.

புலிகள் ஆயுத ரீதியாக பலம் பெற்றுத் தம்மை ஒரு வலிமைமிகு போரியல் கட்டமைப்பாக உருவாகியிருந்தனர். இதனடிப் படையில் ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் 2001 டிசம்பர் மாதம் 5ஆமதிகதி நடை பெற்ற 12வது பாராளுமன்ற பொதுத்தேர்தலில் பெற்ற மககள் ஆணையின பிரகாரம் 2002 பெப்ரவரி 23ஆம திகதி போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது.

இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளுமே போர் நிறுத்தத்திற்கு இணங்கி முதலில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளிலும் பினனர் அரசியல் தீர்வு தொடர்பாக கலந்துரையாடவும் இணக்கம் கண்டு கைகுலுக்கி சந்திப்புக்கள் மேற்கொண்டபோது இந்த நாட்டு மக்கள் போர் இனி ஏற்படாது சமாதானம் நீடித்து நிலைக்கும் என்பதில் பலத்த நம்பிக்கை கொண்டார்கள்.

# நகரும் யுத்த நிறுத்த ஒப்பந்தம்

**அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி இன்றுடன் மூன்று ஆண்டுகள் பூர்த்தியாவதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

16.09.2002 அன்று இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையிலான முதலாம் சுற்று முதலாம் கட்ட பேச்சுவார்த்தை தாய லாந்து சத்தாஹிப் கடற் படைத்தளத்தில் நடைபெறறது. இதனை சர்வதேச ஊடகங்கள் அதிக பிரசித்தமாக்கயதுடன் பேராசிரியர் ஜி. எல்பீரிஸ், புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன பாலசிங்கம் கைலாகு கொடுத்த காட்சியினை ஊடகங்கள் முன்னுரிமை கொடுத்து வெளியிட்டன.

பேச்சுவார்த்தை முடிவில் மிதிவெடிகளை அகற்றுதல், அகதி கள் மீள் குடியோற்றம் என்பன தொடர்பான இணக்கம் காணப்பட்டதுடன் பேச்சுவார்த்தைகள் இணக்கமான சூழலில் இடம்பெற்றதாகவும் இருதரப்பினரும் நம்பிக்கை வெளியிட்டனர்.

ஏப்ரல் 8ஆம் திகதி ஏ-9 திறப்பு,10ஆம் திகதி புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் நடாத்திய ஊடகவியாளர் மாநாடு,ஏப்ரல் 13ஆம் திகதி புலிகளின் தலைவர் -அமைச்சர் ஹக்கம் ஒப்பந்தம் கைச்சாத்திட்டமை வடக்கு-கிழக்கில் நடைமுறையில் இருந்த பொருளாதார போக்குவரத்து தடை நீக்கம், புலிகள் அரசியல் நடவடிக்கை விஸ்தரிப்பு போன்ற நிகழ்வுகள இந்த நாட்டு மக்கள் மத்தியில் நீடித்து நிலைக்கக்கூடிய சாமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையினை வலுப்படுத்தியது.

எனினும் இரண்டாம் சுற்றுப்பேச்சு வார்த்தை தாயலாந்து நகரில் உள்ள ரோஸ்கார்டனில் 2002-10.31இல் ஆரம்பமான தினத்தன்று இலங்கை மேல் நீதிமன்றம்,மத் திய வங்கி குண்டுவெடிப்பு வழக்குத் தொடர்பாக வழங்கிய தீர்ப்பு சிங்களப்பேரினவா தத்தின யதார்த்தத்தின நெருடலாக தமிழ் மக்களுக்கு தென பட்டது போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத் திட்ட புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கு 200 வருட சிறைத் தண்டனை விதிததது மட்டுமன்றி பிடியாணை பிறபித்து சொத்துக்களை பறிமுதல் செய்யுமாறும் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நான்கு தினங்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் யுத்தநிறுத்தத்தை மேலும் வலுப்படுத்துதல்,கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் உறவினை வலுப்படுத்தும் நோக்குடன் கூட்டுக்குழுவினை அமைத்தல், உயர் பாதுகாப்பு வலய மீள் குடியேற்றம், புனர் வாழ்வு கூட்டுச்செயலணிக்குழு அமைத்தல் ஆகிய தீர்மானங்களுடன் கூடிக்கலைந்தார்கள்.

இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் சிரான் அமைப்பு, படை-புலிகள் தரப்பு அங்கம் வகிக்கும் இயல்பு நிலை ஏற்படுத்துவதற்கான குழு என்பன அமைக்கப்பட்டன இரு தரப்பும விட்டுக்கொடுப்புக்களுடன் முன்னேற்றகரமாக செயற்படுவதாக வரவேற்ற மேற்குலக நாடுகள் மற்றும் ஜப்பான், 2002 நவம்பர் 25ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை ஒஸ்லோ உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டை நடத்தியது. 40கொடையாளி நாடுகள் கலந்து கொண்ட கூட்டத்தில் சிரான் அமைப்பை வலுபபடுத்துவதற்கு நிதி வழங்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கத்திற்கும்,விடுதலைப்புலிகளுக்குமிடையிலான முதல் சுற்று மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தைகள் 2.12.2002இல் ஒஸ்லோ எடிசன் பிளாசாவில் ஆரம் பிதது நான்கு தினங்கள் நடை பெற்றன. இப்பேச்சுவார்த்தை முடிவில் இலங்கை ஒரே நாடு என்ற அந்தஸ்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உளளார்நத சமஷ்டி மூலம் தீர்வு காண்பதென இரு தரப்பும்இணங்கின. அத்துடன் ‘ஒஸ்லோ பிரகடனம்' வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



முதல் சுற்று நான்காம் கட்ட பேச்சுவார்த்தைகள் 2003ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் திகதி ஆரம்பித்து நான்கு தினங்கள் நடைபெற்றன.

இதல் முதலில் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியில் மீள் குடியேற்றங்களை துரிதப்படுத்துதல் வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு நிதியத்திற்கு பாதுகாவலராக உலக வங்கியினை நிய மிதல், காணாமல் போனவர்கள் தொடர்பாக ஐ.சி. ஆர். சியின் அனுசர ணையை நாடுதல் என்பவற்றில் இணக்கம் காணப்பட்டதுடன் ஐந்தாம் கட்ட பேச்சுவார்த் தையின் போது மனித உரிமைகள் தொடர்பாக ஆராய்வதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

2003ஆம் ஆண்டு பெப்ரவரி 7ஆம் திகதி நெடுந்தீவு கடற்பரப்பில் கடற்புலி உறுப்பினாகளுக்கும், இலங்கை கடற்படையினருக்கு மிடையில் ஏற்பட்ட முரண்பாடுகாரணமாக ,3 கடற்புலிகள் தற்கொலை செய்த பதற்றமான சூழலில் முதல் சுற்று ஐந்தாம் கட்ட பேச்சுவார்த்தை பெர்லின் நகரில் ஆரம்பமானது.

சிறுவர் உரிமைகள்,மனித உரிமைகள் பற்றி ஆராயப்பட்டதுடன் யுனிசெப் உதவியுடன் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு இடைத்தங்கள் முகாம் அமைத்தல் உள்ளிட்ட செயல் திட்டங்களை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

முதல் சுற்று ஆறாவது சுற்றுப்பேச்சுவார்த்தைகள் மார்ச் 18ஆம் திகதி ஜப்பான் ஹக்கோன் நகரில் ஆரம்பித்து 4 தினங்கள் இடம்பெற்றன இதில் மனித உரிமைகள பற்றி சர்வதேச மனித உரிமைகள் அமைபபின் முன்னாள் தலைவரின் கருத்து செவிமடுக்கப்பட்டதுடன், வடக்கு- கிழக்கில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடததல் ,போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அதிகாரங்களை அதிகரித்தல், அடுத்த சுற்றுப்பேச்சுவார்த்தையில் சமஷ்டி ஊடாக ஐக்கய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தையை மேற்கொள்ளவும் இணக்கம் காணப்பட்டது.

2003ஆம் ஆண்டு ஏப்ரல் 29ஆம் திகதி முதற்சுற்று 6ஆம் கட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருந்த வேளையில் நிகழ்ந்தவை காரணமாக 11 மாதங்கள் மூன்று தினங்கள் இருபிரிவினரும் ஒரே மேசையில் அமர்ந்து பேசாத நிலையிலும் போர்நிறுத்த ஒப்பந்தம் தப்பி பிழைத்து இரண்டாவது அகவையை நிறைவு செய்தது.

10.04.2003 இல் முல்லைக் கடற்பரப்பில் வர்த்தகக்கப்பலில் 11 கடற்புலிகள் வீரச்சாவு அடைந்தமை,14.4.2003 ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளை புறந்தள்ளி வாஷிங்டன் மாநாடு நடத்தியமை போன்ற காரணங்களினால் தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இருந்து தற்காலிகமாக ஒதுங்குவதாக ஏப்ரல் 24 இல் அறிவித்தார்கள். ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறவிருந்த சிரான் கூட்டமும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டன. சமாதானப் பேச்சுவார்த்தையில் நாம் ஈடுபடுவதாயின் இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையை 11.05.2003. இல் புலிகள் உத்தியோகப்பூர்வமாக அறிவித்தனர். அது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளாத காரணத்தினால் டோக்கியோவில் 9.6.2003இல் ஆரம்பமான மாநாட்டினை புலிகள் புறக்கணித்தனர். இம் மாநாட்டில் சமாதன நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டால் 4.5.பில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டது. 14.6.2003 அன்று முல்லைக்கடற்பரப்பில் சர்வதேச வர்த்தக கடற்பரப்பில் 12 கடற்புலிகள் தற்கொலை செய்தததை அடுத்து முறுகல் நிலை மேலும் அதிகரித்தது.

டோக்கியே உதவியைப்பெற வேண்டுமானால் எப்படியும் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரவேண்டியதன் அவசியத்தை உணர்ந்த ஐ.தே.க அரசாங்கம் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக இடைக்கால நிர்வாகசபை வரைபை கையளித்தது புலிகள் 3 தடவைகள் மாறிமாறி கையளித்தது வரபை நிராகரித்து விட்டு 2003ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் திகதி நோர்வேத்தூதுவர் ஊடாக தாம் தயாரித்த வரைபைத் கையளித்தனர். வரைபு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த இரு தரப்பினரும இணங்கிய நிலையில் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் 2003ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் திகதி பாதுகாப்பு, உள்துறை தொடர்பு சாதன அமைச்சுக்களை பொறுப்பேற்றதைத் தொடர்ந்து வரைபு தொடர்பான பேச்சுவார்த்தைகளும் ஆரம்பமாகவில்லை.

பின்பு ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசைக் கலைத்து, ஜே.வி.கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து பொதுத்தேர்தலை நடத்தி மீண்டும் ஆட்சிப்பீடம் வந்தார் ஜனாதிபதி சந்திரிகா.சந்திரிகா-ஜே.வி.பி கூட்டு அரசு சமாதானத்தை மேற்கொண்டு முன்னெடுக்க மறுப்பதுடன் போர் நோக்கிய திசையில் அதனை நகர்த்தும் நடவடிக்கைகளில் துரிதமாக ஈடு படத் தொடங்கியது.

கடந்த வருடம் விடுதலைப்புலிகளால் வெளியேற்றப்பட்ட கருணாவின் பிரச்சினையை தனக்கு சாதகமாகப்பயன்படுத்த சந்திரிகா அரசு முணைந்த போது புரிந்துணர்வு ஒப்பந்த மெதுவாக செயலிழக்கும் நிலை ஆரம்பமானது.

இநத நிலையில் ஜனாதிபதி சந்திரிகா மேற்படி நகர்வுகள் மூலம்,புலிகளை தனிமைப் படுத்தும் அல்லது ஓரங்கட்டும் நடவடிக்கையை இராணுவ ரீதியிலும், அரசியல் ரீதி

## நோயல்

யிலும் மேற்கொள்ள முயன்றார்.

இந்த நிலையில் விடுதலைப்புலிகள் சமாதானக் காலம்(குறிப்பாக 3 ஆண்டுகள்) தமகது பொறியாக மாறும் என்பதனை உணாந்து தம்மை மீளஅமைத்து போராட்ட வடிவத்தை மாற்றிக்கொள்ள தயாராகிக் கொண்டிருந்தனர்

“நாம் பொறுமையின் எல்லைக்கோட்டில் நிற்கின்றோம் இடைக்கால நிர்வாக அடிப்படையில் பேச்சினை ஆரம்பித்து தமிழர் தரப்புககு தீர்வினைத்தர முயற்சிக்காது போருமின்றி சமாதானமும் இன்றிய நிலை தொடாந்தால் விடுதலைப்போரட்டத்தை தொடர்வதைத்தவிர வேறுவழி இல்லை'' என்று கருத்துப்பட தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை அமைந்திருந்தது.

எந்த நிமிடத்திலும் போர் வெடிக்கலாம் என்றிருந்த சூழ்நிலையில் 2004 டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி கடல் பேரனர்த்தம் நாடு காணாத பேரழிவை ஏற்படுத்தியதுடன போரினை பின்னுக்குக் தள்ளிவிட்டுள்ளது.

இலங்கை இராணுவம் கருணா அணி இயங்கும் ஆயுதக்குழுக்களை அரவணைக்கத் தொடங்கிய போதே போர் நிறுத்த ஒப்பநத்தின பிரதான ஓர் அங்கம் மீறப்பட்டு விடடது. இதுவே ஒப்பந்தத்தை கிளிக்க காரணமாக அமையும் சாத்தியமுள்ளது. ஒப்பந்தத்தின் பின் வடக்கை விட கிழக்குப்பிரதேசம் தான் எப்பொழுதும் கொதி நிலையிலேயே இருநது வருகிறது.

அதற்குச்சான்றாக அண்மையில் மட்டு.-அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உட்படடோரின் படுகொலைகள் புலிகளை மீண்டும் ஒரு நெருக்கடியில் கொண்டுசென்று விட்டுள்ளது. இந்த நிலையில் புரிந்துணர்வு உடன் படிக்கையின் அடுத்த கட்ட நகர்வுகள் எவ்வாறு அமையப்போகின்றது என்பது அரசின் கைகளிலும், புலிகளின் பொறுமையிலுமேதங்கியுள்ளது. □

கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை - குறள்

வலம்புரி

## அடிக்கடி மாறும் புதிய கல்வித்திட்டம்

இலங்கையின் அண்மைக்கால கல்விச் செயற் பாடுகள் வெறுப்பைத் தருவனவாக அமைந்துள்ளன. இலவசக் கல்வி என்று பெருமைப்படும் அதேவேளை ஓர் நிலையான கல்விக்கொள்கை கடைப்பிடிக்கப் படாமையினால் மாணவர்களின் கல்விச்செயற்பாடும் மனநிலையும் பாதிப்படைகிறது.

புதிய கல்விச் சீர்திருத்தம் என்ற வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கணிப்பீட்டு முறைகளில் அடிக்கடி மாற்றங்கள் செய்யப்படு வதனால் மாணவர்கள் முதல் ஆசிரியர்கள் வரையிலான பாடசாலை நிர்வாகம் குழம்பிப்போயுள்ளது.

தவணைக்குத் தவணை வருடத்திற்கு வருடம் மாற்றப்படும் கணிப்பீட்டு முறைகளால் மாணவர்கள் எந்த நன்மையையும் பெறமுடியாது. மாணவர்கள் மந்தகதி அடைந்துள்ளனர்.

கடந்தகாலங்களில் ஓர் கல்வித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாயின் அதன் சாதக பாதக விளைவுகள் ஆராயப்பட்டு அதன்பின்னரே அத்திட்டம் அமுல்படுத்தப்படும். அவ் வாறு ஓர் கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு விட்டதாயின் அதன்இருப்பு ஓர் குறிப்பட்ட காலத்தை இலக்காக கொண்டு நடைமுறைப்படுத்தப்படும்.

ஆனால் இப்போதெல்லாம் அந்த நிலைமை இல்லை. அரசியல்வாதிகளின் தலையீடு கட்சிகளின் வெவ்வேறு கல்விக்கொள்கை இவற்றி னால் இலங்கையின் சமகாலக் கல்விமுறை இன்னமும் ஓர் திடமான நிலையின்றி தத்தளிக்கின்றது.

கல்விக் கொள்கையினை அரசியல் கலப்பின்றி நடைமுறைப்படுத்துவதற்கென தேசிய கல்வி நிறுவகம் அமைக்கப்பட்ட போதிலும் அதன் செயற் பாடுகள் ஆழ்ந்த கவலையை தருவனவாக உள்ளன.

கல்வித்திட்டத்தில் அறிமுகப்படுத்திய கணிப்பீட்டு முறைகள் ஓர் தெளிந்த முடிவோடு முன் வைக்கப்படவில்லை என்பதையும் கணிப்பீட்டுத்திட்டத்தை அறிமுகப்படுத்த முன்னர் அது உரிய முறையில் ஆராயப்படவில்லை என்பதையும் கணிப்பீட்டில் அடிக்கடி செய்யப்படும் மாற்றங்கள் உறுதிப்படுத்துகின்றன.

குறிப்பாக க.பொ.த. உயர்தர மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட கணிப்பீட்டு முறைகள் அடிக்கடி மாற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு உயர் தரமாணவர்கள் மத்தியில் நடைமுறைப்படுத்தப்படும் கணிப்பீட்டு முறைகளை அடிக்கடி மாற்றத்திற்கு உட்படுத்தும் போது அதிலோர் நம்பகத்தன்மையும் மாணவர்களுக்கு ஏற்படவே செய்யும்.

இது தவிர, உயர்தர மாணவர்களின் கணிப்பீடுகள் பரீட்சைகள் என்பனவற்றை பதிவு செய்வதற்கென அறிமுகப்படுத்தப்பட்ட மாணவர் பதிவேடுகள் - அதிலுள்ள விடைத்தானங்கள் என்பன எந்தவித முன் யோசனையும் இன்றி அறிமுகப்படுத்தப்பட்டு வாபஸ் பெறப்படுகிறது.

இதனால் மாணவர் பதிவுப்புத்தகத்தின் பெறுமதி வலுவிழந்து போகின்றது. இப்படியே கணிப் பீடுகள் பதிவேடுகளில் மாற்றங்களைச் செய்த கல்வி இலாகா கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பாடப்புத்தகங்களை மாற்றியது.


ஆனால் அதிலும் ஓர் நிதானமான கொள்கை இல்லை. இரண்டு வருட இடைவெளிக்குள் மீண்டும் தரம் ஆறுக்கான பாடப்புத்தகங்கள் மாற்றப்பட்டுள்ளன.

இப்படியே கல்வித்திட்டங்கள் மாற்றப்படு மாயின் அதன் விளைவு மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாதிப்பதோடு அவர்களின் வினைத்திறனையும் வீழ்ச்சியடைய செய்துவிடும். மாணவர்களுக்கான பல்கலைக்கழக அனுமதிகள்யாவும் போட்டிப்பரீட்சை மூலம் தீர்மானிககப்படும் போது செயற்திட்டம் உச்சம் அடைந்திருந்தால் மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகளின் வெளியீட்டு மட்டம் குறைவடை யவே செய்யும்.

இதனைக் கல்வி அதிகாரிகள் உணர்ந்து நிலைமையை உரிய இடங்களுக்கு எடுத்தியம்ப வேண்டும்.

# 40 வீத இளைஞர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகிவிட்டனர்

## ஜனாதிபதி கவலை



(கொழும்பு)

நாட்டின் இளைஞர் சமுதாயத்தில் நூற்றுக்கு நாற்பது வீதமானோர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கவலை தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரம் உலகமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்த நிலைமை தோன்றியுள்ளது எனக் குறிப்பிட்ட அவர்,

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் முகமாக சட்டத்தையும் பொலிஸாரின் செயற்பாடுகளையும் பலப்படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

ஹோமாகமப் பகுதியில் இலங்கை பௌத்த பல்கலைக் கழகததின் புதிய கட்டிடத் தொகுதித் திறப்பு விழா வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது நாட்டில் உள்ள இளைஞர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி விட்டதினாலேயே நாட்டில் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

கொலை, கொள்ளை மற்றும் பாலியல் வல்லுறவுகளில் ஈடுபடும் இளைஞர்கள் போதைப் பொருளை அதிகம் பயன்படுத்தி வருகிறார்கள் எனக் கூறப்படுகிறது.

போர்க்காலத்திலும் பார்க்க தற் போதுதான்இந்த வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

போதைப் பொருள் பாவனை, ஆபாசப் படங்கள் பார்த்தல், கலாசார சீரழிவு என்ற வகையில் இளைஞர் சமுதாயம் சீரழிந்து போகின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவை தவிர, பௌத்த பல்கலைக்கழகங்களின் முன்னேற்றத்துக்காக தொடர்ந்தும் தான் உழைக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

வெளிநாட்டில் உள்ள பிக்கு மாணவர்களுக்குக் குறைந்த காலப்பகுதிக்குள் அறநெறிகளைப் போதிக்கும் பாடத்திட்டங்களை வழங்கப்போவதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (க-8)

# நுகர்வோர் விவகார சபை அனுமதியின்றி மாவின் விலையை அதிகரிக்க முடியாது

(கொழும்பு)

நுகர்வோர் விவகார அதிகார சபையின் அனுமதி இன்றி கோதுமை மாவின் விலையை அதிகரிக்க முடியாது என வர்த்தக வாணிப நுகர்வோா விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

கோதுமை மாவிற்கு வழங்கப்பட்டிருந்த மானிய முறை நக்கப்பட்டதை அடுத்த அதன் விலை அதிகரிக்கும் என மக்கள் மத்தியில் அச்சம் தோன்றியுள்ளது.

எவ்வாறாயினும் இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் தமது சுயவிருப்பின் பெயரில் கோதுமை மாவின் விலையை அதிகரிக்க முடியாது என அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, மாவின் விலையை அதிகரிப்பது தொடர்பில் எந்தவொரு நிறுவனமோ, திணைக்களமோ இதுவரை தம்மிடம் அனுமதி கோரவில்லை என நுகர்வோர் விவகார அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

இவ்வாறு விலை அதிகரிப்பதற்காக அனுமதி கோரப்படும் பட்சத்தில் இந்த நிறுவனங்கள் அரசுடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைகள் என்பவற்றுக்கு ஏற்ப அது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (க-9)

## நிர்மாண வேலைகள் பூர்த்தி

(பொன்னாலை)

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்குச் சமீபமாக உள்ள காணியில் நிறுவப்பட்டு வந்த மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

கடந்த ஆண்டு "நர்ப்" திட்டத்தின் கீழ் இக்கட்டட அமைப்பிற்கான நிதி ஒதுக்கப்பட்டது.

இதேவேளை, வட்டுக்கோட்டை அரசினர் கிராம வைத்தியசாலையிலும வைத்திய் அதிகாரிக்கான வசிப்பிடக் கட்டடம் ஒன்று நிறுவப்பட்டு வந்தது. அக்கட்டட வேலைகளும் தற்போது பூர்த்தியடைந்துவிட்டன.

இக்கட்டடங்கள் இரண்டும் இம்மாத இறுதியில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவிருப்பதாகத் தெரியவருகினறது. (ப-49)

## க.பொ.த(உ/த) இல் இவ்வருடம் முதல் தகவல் தொழில் நுட்பமும் உள்ளடக்கம்

(கொழும்பு)

இவ்வருடம் முதல் க.பொ.த.(உ/த) பரீட்சைக்குத் தகவல தொழில் நுட்பமும் ஒரு பாடமாக சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி தரம்-12 இல் கற்கவுள்ள மாணவர்கள் இவ்வருடம முதல் பொதுத் தகவல் தொழில் நுட்பம் (GIT) எனும் பாடத்தையும் எதிர்வரும் மே மாதம் முதல் கற்கவேண்டும் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் வருடம் முதல் தகவல் தொழில் நுட்பத்தை ஒரு பாடமாக க.பொ.த(சா/த) மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கும் கல்வி அமைச்சு அதிகாரிகள் திட்டமிட்டுவருகின்றனர்.

இலங்கையின் கல்விமுறையை நவீனமயமாக்குவதற்கு உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் வழங்கிய நிதியுதவி மூலமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக ஆசிரியர்களுக்கு அடுத்த மாதம் முதல் அமைச்சு பயிற்சிகளையும் வழங்கவுள்ளது. இது 3 பிரிவுகளாக நடைபெறும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ற-6)

## நாட்டுப் பற்றாளர் இருவர் வீரச்சாவு

கடந்த 24-11-2004அன்று மட்டக்களப்பு வந்தாறு மூலைப் பகுதியில் தேசவிரோதக் குழுவினரால் சுடப்பட்டு நாட்டுப் பற்றாளர்கள் இருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டதாக தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

நாட்டுப்பற்றாளர் தயாபரன் என அழைக்கப்படும சந்தை வீதி வந்தாறு மூலையைச் சேர்ந்த சண்முகம் தயாபரன், நாட்டுப் பற்றாளர் மனோகரன் என அழைக்கப்படும் பாடசாலை வீதி வந்தாறு மூலையைச் சேர்ந்த சண்முகநாதன மனோகரன ஆகிய இருவருமே வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்களாவர். (க-8)

## மூலிகைச் செடிகளை உருவாக்க அரசாங்கம் விசேட திட்டம்

(கொழும்பு)

ஆயுள்வேத வைத்தியத்துறைக்குத் தேவையான கிடைத்தற்குரிய மூலிகைச் செடிகளை உருவாக்கும் விசேட திட்டம் ஒன்றை விரைவில் அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுதேச வைத்திய அமைச்சு தெரிவித்துளளது.

இதற்கென கடந்த வரவு-செலவுத்திட்டத்தில் 100 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதாகவும அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த கிடைத்தற்கரிய மூலிகைகள் இதுவரை காலமும் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதாகவும் அமைச்சு தெரிவித்துளளது.

இந்த புதிய திட்டத்தின் கீழ மூலிகை செடிகளை இறக்குமதி செய்வதற்காக ஆண்டுதோறும் செலவிடப்படும் மேலதிக நிதியை சேமிக்க முடியும் என அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இந்த மூலிகை தோட்டங்களை ஆரம்பிப்பதற்கென விவசாயிகளுக்கு விசேட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (க-9)

## அவசர காலச் சட்டத்தை எவ்வாறு அமுல்படுத்துவது

### ஐ.தே.க. விளக்கம்

(கொழும்பு)

சுனாமி நிவாரணங்களை உரிய முறையில் வழங்கும் பொருட்டு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்திலேயே அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்க வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் பிரதேச செயலாளர் பிரிவுகள் சிலவற்றுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டமைக்காக, முழுமாவட்டத்திலும் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்துவது பொருத்த மறறது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.


அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் கூறும் காரணங்கள் நியாயத்திற்குப் புறம்பானவை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எதிர்காலத்தில் கட்டுப்படுத்தும் செயற்திட்டங்களை நடை முறைப்படுத்தும் நோக்கத்தையே அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை காட்டுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-9)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**ஒரு பசு பொய்சொன்னதாகவோ ஒரு மரம் திருடியதாகவோ நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? அவை பரிபூரணமான எந்திரங்கள் அவை தவறுகள் செய்வதில்லை. எல்லாம் முடிந்துவிட்டதோர் உலகில் அவை வாழ்கின்றன. இது செயல் முறை மதம் இல்லை என்றால் மதத்தின் இலட்சியம் தான் என்ன? அப்படி ஒன்றும் இருக்க முடியாது.**

சுவாமி விவேகானந்தர்







இலங்கைக்கு விஜயம் செய்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதிகள் சுனாமியால் பாதிக்கப்பட்ட தென்பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர். அங்கு அவர்கள் சிறுவர்களுடன் பேசிமகிழ்வதை முதலாவது படத்திலும். சுனாமிப் பாதிப்புக்கள் குறித்து கேட்டறிந்து கொள்வதை இரண்டாவது படத்திலும் அமெரிக்க ஜனாதிபதிகளின் வருகையொட்டி பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட இராணுவத்தினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# சவுக்கு வெட்டச் சென்றவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர்

(துன்னாலை)

சவுக்கு விறகு வெட்டச்சென்ற ஆறு பேரை வல்லிபுரப் பகுதியில் வழிமறித்து ஒரு குழுவினர் பலமாகத் தாக்கியதுடன் அவர்கள் விறகுவெட்டக் கொண்டுசென்ற கோடரியால் கொத்தியும், தாக்கியும் உள் ளனர். இதனால் ஒருவர் தோள்மூட்டுப்பகுதியில் பலத்த வெட்டுக்காயங்களுக்கு இலக் கானார். இவர்கள் கொண்டுசென்ற சயிக் கிள்களையும் அக்குழுவினர் பறித்துச் சென்றுள்ளனர்.

சுமார் 9 பேர் அடங்கிய குழுவினர் ஹன்டர் வாகனத்தில்வந்து வழிமறித்து தங்களைத் தாக்கியதாகப் பாதிப்புற்றவர்கள் கூறினர். இதில் ஐவருக்கு கையிலும் காலிலும் முறிவு ஏற்பட்டுள்ளது. (க-101)

# பாப்பா-மணிலால் நேற்று கிளிநொச்சியில் சந்திப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பாவை ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பிரதித்தலைவரும் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் நிர்வாகக்குழுத் தலைவருமான மணிலால் பெர்னாண்டோ தலைமையிலான குழுவினர் நேற்று கிளிநொச்சியில் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் முற்பகல் 10.30 மணிதொடக்கம் 11.10வரை இச்சந்திப்பு இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் தமிழீழவிடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலக பணிப்பாளர் தூயவன் .தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்தஉறுப்பினர் க.வே பாலகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் நிறைவில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா அவர்கள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார். தமிழர்தாயக பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களில் 175 வீடுகளை அமைத்து தருவதற்காக ஆசிய பிராந்தியத்திற்குரிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவர் உறுதியளித்தார்.

அத்துடன் திட்டமிடல் செயலகத்தால் நிர்மாணிக்கப்பட் அளவிற்கேற்ப வீடுகளை அமைத்து தருவதற்கு இன்றைய சந்திப்பில இணக்கம் காணப்பட்டது. இது தொடர்பான வேலைத்திட்டங்கள் தொடர்ச்சியாக இடம் பெறவுள்ளன.

அதே வேளை இக்குழுவினர் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் பார்வையிடுவது, முல்லைத்தீவில பாதிப்படைந்த இடங்களுக்குச் செல்வது போன்றனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மற்றும் தமிழீழ விடுதலைப புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் மைதானங்களை அமைப்பதற்கு தீர்மானங்கள் எடுக்கப்பட்டுளளதுடன்.

சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் ஊடாக கிடைக்கின்ற நிதியை வடக்கு கிழக்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு கிடைக்க செய்வது தொடர்பாகவும கலந்துரையாடப்பட்டது என்று தெரிவித்தார்.(இ)

# அரசும் புலிகளும்...

சுனாமி அழிவுகளை பார்வையிட இலங்கைக்கு வருகைதந்த அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகள் இருவரும் தென் பகுதிஅழிவுகளை நேரில்சென்று பார்வையிட்டனர்.

இதனையடுத்து ஊடகக்காரர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர்கள் இருவரும் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இலங்கையின் அமைதி சமாதான நகர்வுகள் சுனாமி நிதிப்பங்களிப்புப்பகிர்வு குறித்து கருத்துத்தெரிவித்த அவர்கள் மேலும் குறிப்பிடுகையில் சுனாமி அனர்த்தத்தின் பின்னரே விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் ஒன்று பட்டுச் செயற்படுவதற்கான நல்லவாய்ப்பு ஏற்பட்டது.

இந்நிலைமை இரு தசாப்பத காலமாக நாட்டுமக்கள் அனைவரும் எதிர்பார்த்திருந்த சமாதானத்தை அடைய வழிவகுக்கும்.

விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் ஒன்று பட்டுச்செயற்படுவதன் மூலம் போர் உட்பட பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும் அத்துடன்பல்வேறு தரப்பினருக்கிடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுடியும்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கவென விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்படுவதென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்ததீர்மானது பாராட்டப்பட வேண்டியதே ஆனால் தொடர்ந்தும் சமாதான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதிலேயே சர்வதேசத்தின் நிதியுதவிகள் தொடரும் என அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கையில் கடந்த மூன்று ஆண்டுகளாக யுத்தநிறுத்தம் என்ற ஒன்று நடைமுறையில் இருந்தபோதும் கடந்த சில நாட்களாக இருதரப்பினரிடையேயும் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவில்லை இவ்வாறு சமாதானம் தொடரப்படாமல் இழுபடுவது மக்கள் மத்தியில் கவலையையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

சுனாமி புனரமைப்புப் பணிகளில் தமிழ் மக்களும் அரசாங்கமும் ஒன்றிணைந்து செயற்படுவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எங்களிடம் கூறினார்.

சுனாமிப் பேரலையினால் பெரிதும் பாதிப்படைந்த இலங்கை மக்களுக்கு உதவ விரும்பும் சர்வதேச சமூகம் இலங்கைக்கு வரவேண்டும் அத்துடன் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட வேண்டும் எனவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான விஜயத்தினை மேற்கொண்டு இலங்கை வந்திருந்த அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள் இருவரும் நேற்று பிற்பகல் இலங்கையில் இருந்து புறப்பட்டு மாலைதீவு சென்றந்தனர்.

சுனாமி நிவாரண புனர் நிர்மாண நிதி திரட்டும் பணிகளின் பொருட்டு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள் தற்போதைய ஜனாதிபதி ஜோர்ச்டபிள்யூ புஷ்ஷினால் நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-4)

# நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் தெஸ்பியன் கலைவட்டம் நடாத்தும் கந்தையா ஸ்ரீகந்தவேள் எழுதிய 'அரங்கியற் கட்டுரைகள்' நூல் வெளியீட்டு விழா நாளை கீாலை 10 மணிக்கு இணுவில் மத்தியகல்லூரி ஆரம்பப்பிரிவு மண்டபத்தில நடைபெறவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபீர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைகழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியற்துறைப் பேராசிரியர் சபா ஜெயராசா கலந்துகொள்ளவுள்ளார். (ச)

# அரசு - பிரி....

இடங்களைப் பார்வையிடுவதற்கு அவர் ஆர்வம் கொண்டிருக்கிறார்.

இதற்கமைய பிரித்தானியத் தூதரகம் நிகழ்ச்சி நிரலை தயாரித்து வருகின்றபோதிலும் இலங்கை அரசாங்கம் அதற்கு எதிர்புத் தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனைக் கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத்தின் பேச்சாளரான கொலின் கிக்சும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடுவதற்காக தென்கிழக்காசிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதிகளான ஜோர்ஜ் புஷ், பில்கிளிங்டன் ஆகியோர் நேற்று முன்தினம் மாலை இந்தோனேசியா ஊடாக அமெரிக்க விமானம் ஒன்றின் மூலம் கொழும்பு வந்தடைந்தனர்.

நேற்றுமுன்தினமிரவு இவர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்துள்ளனர். நேற்று மாத்தறை மாவட்டத்திற்கு விஜயம்செய்து அந்த இடங்களைப் பார்வையிட்ட பின்னர் மாலைதீவிற்குப் பயணமானார்கள். (க)

# கடற்தொழிலாளர்....

கெம்பியதையடுத்து அவர்கள் மூவரும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக மனிதஉரிமை ஆணைக்குழு, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் யாழ். அரச அதிபர் ஆகியோருக்கு முறையிடப்பட்டுள்ளது. (இ-35)

# பில்கிளின்டன்....

நேற்றுக்காலை 9.30 மணியளவில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதிகள் விசேட ஹெலிகொப்டரில் ஹொக்கல விமானப் படை மைதானத்தைச் சென்றடைந்தனர். இவர்களுடன் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜல்விறி லான்ஸ்ரட்டும் சென்றனர்.

பலத்த பாதுகாப்பின் மத்தியில் மாத்தறைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த அவர்கள் ஹொக்கலையில் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தைச்சென்று பார்வையிட்டனர். பின்னர் இவர்கள் வெலிகமவில் உள்ள புல்லத்துமோதரப் பிரதேசத்துக்கும் விஜயம் செய்தனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தங்கியிருந்த நலன்புரி நிலையத்துக்குச் சென்ற ஜோர்ஜ் புஷ்ஷும், பில்கிளின்ரனும் அங்கு சிறுவர்களால் வரையப்பட்ட சித்திரங்களையும், அவர்களால் கட்டப்பட்ட சிறிய இல்லங்களையும் பார்வையிட்டனர்.

பின்னர் தமது விஜயத்தை நிறைவு செய்துகொண்டு நேற்றுமாலை மாலைதீவுக்குப் பயணமானார்கள். (ச-4)

# பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய முதல்வர் சு.யோகராசாவின் பாராட்டு விழா இன்று முற்பகல் 9.30 மணிக்கு யாழ். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர்சங்க உபதலைவர் திருமதி லலிதா மகேந்திரன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. (க)

# எம்பிலிப்பிட்டிய...

19 கைதிகள் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலகக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

தங்காலைச் சிறைச்சாலையிலிருந்து கைதிகள் சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றப்பட்டு நீதிமன்ற வளவில் இறக்கப்பட்டு உள்ளே அழைத்துச் செல்லமுற்பட்ட சமயமே கைதிகளைத் தப்பிக்கச் செய்யும் வகையில் இக்கைக் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தமது சகாக்களை தப்பிக்கவைக்கும் நோக்கில் பாதாள உலகக்குழுவினரே திட்டமிட்டு கைக்குண்டுத் தாக்குதலை நடத்தியிருக்கலாமென நம்பப்படுகிறது.

இதேவேளை நீதிமன்ற வளாகத்திற்குள் எப்படிக் குண்டு கொண்டுவரப்பட்டது என்பது மர்ம்மாகவே காணப்படுகின்றது. (இ-8)












இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.02.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.